விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 28 திங்கட்கிழமை (13.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 268

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்துந்து
RAMCO

## ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதிகள் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம்

(திருகோணமலை)

ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் இலங்கைக்கான பிரதிநிதி நீல் பூனே மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் 3 நாள் விஜயம் மேற்கொண்டு கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

திருகோணமலை செல்லும் இவர்கள் மதியம் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொகான் விஜயவிக்கிரம, முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா ஆகியோரை அவர்களது அலுவலகத்தில் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறியவுள்ளனர்.

15ஆம் திகதி காலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் இடம் பெயர்ந்தோர் தங்க வைக்கப்பட்டுள்ள கிளிவெட்டி நலன்புரி நிலையத்திற்கு சென்று மூதூர் கிழக்கு பகுதியில் இருந்து வெளியேறிய (18ஆம் பக்கம் பார்க்க)

## சஜித்தை எதிர்க்கட்சித் தலைவராக்க 25 ஐ.தே.க. எம்.பிக்கள் இரகசியத் திட்டம்

### 18 பேரின் ஆதரவுடன் ரணில்

(கொழும்பு)

இலங்கையின் எதிர்க்கட்சி தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவை நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன் இதற்காக ஏனைய எதிர்க்கட்சிகளுடன் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே 60 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து 17 உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து விட்டனர்.

இதனையடுத்து (18ஆம் பக்கம் பார்க்க)

# நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க கூட்டமைப்பு தயார்



## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(லண்டன்)

**ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க தயார் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். இது தொடர்பில் தமக்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.**

இலங்கையில் ஜனாதிபதியினால் அமைக்கப்பட்டுள்ள படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னர் சாட்சியமளிக்க வரும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து இரா.சம்பந்தன் கூறியதாவது, (18ஆம் பக்கம் பார்க்க)

## பதில் ஆணையாளர் வடக்கு விஜயம்

(கொழும்பு)

பதில் தேர்தல் ஆணையாளர் பி.எம்.சிறிவர்தன நாளை வடக்கிற்கு இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2010ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியலில் பிழைகள் காணப்படுவதாகவும் இதனை கருத்திற் (18ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். சிறைச்சாலையில் 24 கைதிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கைதிகள் தினத்தை முன்னிட்டு யாழ். சிறைச்சாலையில் இருந்து 24 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 4 பேர் சிங்கள கைதிகள் என்ற காரணத்தால் அவர்களை அனுராதபுரம் சிறைச்சாலைக்கு கொண்டு சென்று விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏனைய 20 கைதிகளில் 16 பேர் ஆண்களும் 4 பேர் பெண்களுமாவர். இவர்களை விடுவிப்பதற்கான அனுமதியைச் சிறைச்சாலைகள் (18ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி இல்லாத நிலைக்கு அரசு பலமடைந்து வருகின்றது



### பிரதியமைச்சர் முரளிதரன்

(மட்டக்களப்பு)

சகலரும் ஒன்றுபட்டு செயற்படுவதன் மூலமே எமது அரசியல் பலத்தை அதிகரிக்கலாம் என ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பிரதித்தலைவரும் மீள் குடியேற்ற பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற மக்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், 30 ஆண்டு காலமாக (18ஆம் பக்கம் பார்க்க)

## தாண்டிக்குளத்தில் அலுவலகம் திறக்க புலனாய்வுத்துறையினரால் தொந்தரவு

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(வவுனியா)

வவுனியாவில் கட்சி அலுவலகமொன்றை திறப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது தாண்டிக்குளம் பொலிஸாரும் இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் என தம்மை இனங்காட்டிக் கொண்ட நபர்கள் சிலரும் தம்மைத் தொந்தரவு படுத்தியதாக ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.


கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவினால் திறக்கப்படவுள்ள இந்த அலுவலகத்தை அலங்கரிக்கும் நடவடிக்கைகளில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டிருந்த ஜே.வி.பி. அங்கத்தவர்களின் விபரங்களை தண்டிக்குளம் பொலிஸ் (18ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் எச்.எம்.பௌசி யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டுள்ளதை படத்தில் காணலாம்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்










உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி-2010 ஐ முன்னிட்டு வலம்புரியும் டயலொக் நிறுவனமும் இணைந்து நடத்திய புதிர்ப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று வலம்புரி அலுவலகத்தில் நடைபெற்றது.இதில் முகாமைத்துவப் பணிப்பாளர் வெற்றிவேலாயுதம் தலைமையுரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட சி.யமுனாநந்தா,டயலொக்கின் யாழ்.சேவை நிலைய முகாமையாளர் தி.சிவகுகன் ஆகியோர் உரையாற்றுவதையும் ,வலம்புரியின் பொது முகாமையாளர் என்.கஜேந்திரன் நன்றியுரை நிகழ்த்துவதையும் மேலுள்ள படங்களிலும்,வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை சிறப்பு விருந்தினர்கள் வழங்குவதையும் ,வெற்றியாளர்களையும் படங்களில் காணலாம்.

# தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அழிப்பதில் அரசு தீவிரமாக உள்ளது

## ஜேர்மனியில் மாவை.சேனாதிராஜா முழக்கம்



(ரேயினே)

தமிழர்களின் தாயகத்தை, அவர்களின் சுய நிர்ணய உரிமை அடையாளங்களை அழித்துவிட இலங்கை அரசு தீவிரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஜேர்மனி ரேயினே நகரில் நடைபெற்ற உலகத் தமிழ் பண்பாட்டியக்கத்தின் அகம் புலம் தமிழர் வாழ்வியல் மகாநாட்டில் சிறப்பு அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத்தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இம் மகாநாட்டில் இலங்கையிலிருந்து சென்ற மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், சீ.யோகேஸ்வரன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும்தமிழ் அறிஞர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இம் மாநாட்டில் மாவை சேனாதிராசா தொடர்ந்து உரையாற்றுகையில்,

2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் முள்ளிவாய்க்காலில் துயரத்தில் உறவுகளை இழந்தவர்களாய் வாழும் நாங்கள் இன்று முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டிருக்கும் இராணுவ அடக்குமுறைக்குள் சிக்கியிருக்கும் இனத்தின் விடியலுக்காய் பேசுகிறோம்.

உலகத் தமிழ் பண்பாட்டியக்கம் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காய் அவர்களை தூக்கி விடுவதற்காக இந்த மகாநாட்டின் மூலம் நடவடிக்கை எடுப்பார்கள் என நம்புகிறேன்.

தமிழர்களுடைய வாழ்வியல் பண்பாடு இனங்களுக்கான ஒற்றுமை தமது கலாசாரத்தை இழந்துவிடாமல் அடுத்த சந்ததிக்காக அதை எடுத்துச் செல்ல முற்படும் உலகத் தமிழ் பண்பாட்டியக்கத்தின் செயற்பாடு வெற்றி பெற எனது வாழ்த்துக்கள்.

தமது பாரம்பரிய பிரதேசங்களையும் மொழியையும் உரிமையையும் காப்பாற்றிக்கொள்ள 60 ஆண்டு காலமாக எமது இனம் போராடி வருகின்ற போதிலும் அந்த இலக்கை அடைய முடியாத நிலையில் இருக்கின்றோம்.

இன்று நாங்கள் கல்லில் கட்டி கடலில் போடப்பட்ட இனமாகக வாழ்கின்றோம். நாங்கள் என்றாவது ஒருநாள் மேலே வருவோம். முகாமில் அடைத்து வைத்திருக்கும் மக்களை நாங்கள் சென்று பார்ப்பதற்கு அரசாங்கம் அனுமதிக்கவில்லை. ஆனாலும் அந்த மக்கள் எமக்கே வாக்களித்து தமது ஒற்றுமையையும் உறுதியையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அந்த மக்களை வாழ்விக்க வேண்டிய பொறுப்பு எமக்குண்டு. துன்பத்தில் துவளும் அந்த மக்களுக்கு உதவவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு மேற்குலகு நாடுகளில் வாழும் தமிழ் உறவுகளுக்கு இருக்கின்றது.

கடந்த தேர்தலின் போது எம்மீது பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. தேர்தலின் போது பிளவுகள் இல்லாமல் இருந்திருந்தால் நாங்கள் மேலும் பல உறுப்பினர்களை பெற்றிருப்போம்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நாங்கள் மட்டக்களப்பிற்கு போக முடியாமல் இருந்தோம். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு தமிழர் வாழும் பிரதே சம் எங்கும் எண்ணில் அடங்காத துன்பத்துடன் வாழும் மக்களை கைதூக்கிவிட வேண்டிய மிகப் பெரிய பொறுப்பை உணர்ந்து செயற்படுவீர்கள் என நம்புகிறேன் என்று தெரிவித்தார். (ச)

# தெற்காசிய நாடுகள் டெங்கினால் அதிக பாதிப்பு

(கொழும்பு)

இலங்கை உட்பட தென்கிழக்காசியாவில் டெங்கின் தாக்கத்தினால் அதிகளவு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக அட்லாந்தாவின் நோய் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் டெங்கு நோய் மோசமான பாதிப்பை இந்த வருடம் ஏற்படுத்தியிருக்கின்ற நிலையில் அட்லாந்தாவின் நோய் கட்டுப்பாட்டு நிலையத்தின் தகவலின் உதவியுடன் இந்திய சுகாதார அமைச்சு மேற்கொண்ட கணிப்பீட் டின் பிரகாரம் இலங்கை, தாய்லாந்து, இந்தோனேசியா, மியன்மார் ஆகிய நாடுகளில் டெங்கு நோயின் தாக்கத்தால் தற்போது அதிகளவுக்கு பாதிக்கப்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.


நுளம்பால் பரவும் இந்த நோயினால் வருடாந்தம் 5 கோடி மக்கள் பாதிக்கப்படுவதாகவும் டெங்கு பரவும் நாடுகளில் 250 கோடி மக்கள் வாழ்வதாகவும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

கடந்த ஜூலை மாதம் 10 ஆம் திகதி வரை தென்கிழக்காசியாவில் இந்தோனேசியாவில் 86 ஆயிர த்து 065 பேரும் தாய்லாந்தில் 57 ஆயிரத்து 948 பேரும் இலங்கையில் 28 ஆயிரத்து 955 பேரும் மியன்மாரில் 12 ஆயிரம் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பூட்டானில் டெங்கால் பாதிக்கப்பட்டோரின் இறப்பு வீதம் 2.28 ஆகவும் இலங்கையில் 0. 99 சதவீதமாகவும் இந்தோ னேசியாவில் 0.89 சதவீதமாகவும் மியன்மாரில் 0.75 சத வீதமாகவும் இந்தியாவில் 0.62 சதவீதமா கவும் உள்ளது. (ச)

# பொம்மைவெளிப் பகுதி மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு

## அமைச்சர் பௌசி நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்.பொம்மைவெளிப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் மழை காலங்களில் வெள்ளத்தால் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.ச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

பொம்மை வெளிப் பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்த அமைச்சர் அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தபின்னர் இது குறித்து தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்,யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ. சரவணபவ ஆகியோர் அமைச்சருடன் குறித்த இடத்துக்கு விஜயம் செய்துஅங்கு இடம்பெறும் பிரச் சினைகள் குறித்து தெரியப்படுத்தினார்.

இதனையடுத்து யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஊடாக விசேட திட்டம் ஒன்றை முன்வைத்து இந்த மக்களை உடனடியாக மேட்டுநிலப் பகுதிக்கு இடமாற்றம் செய்து இப்பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-5)





**வீடு வாடகைக்கு**

தாவளை வட்டுக் கோட்டை கிழக்கில் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-
0779040033

(C-1169)

**வேலை ஆட்கள் தேவை**

புடவை விற்பனை நிலையத்திற்கு 2 பெண்பிள்ளைகளும், ஒரு ஆணும் (40-45 வயதிற்குட்பட்டவர்) தேவை.அனுபவம் உள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.யாழ்.நகரப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.தொடர்புக்கு:-
லைடன் புடவை நிலையம்
410,ஆஸ்பத்திரி வீதி(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.
(C-1146)

# இன்று ஒரு தகவல்

## அசைவுகளும் அர்த்தங்களும்

ஒரு ஆள் இருந்தார். அவர் தன்னை ஒரு குரு- என்று சொல்லிக் கொண்டார். மௌனகுரு. வாயே திறப்பதில்லை. அவருக்கு இரண்டு சீடர்கள் உண்டு. அவர்கள் தான் வருபவர்கள், போகிறவர்களிடம் பேசுவார்கள். விளக்கம் கொடுப்பார்கள்.

ஒரு நாள் இந்தச் சீடர்கள் இரண்டு பேரும் எங்கேயோ வெளியில் போய்விட்டார்கள்.

அந்த நேரம் பார்த்து ஒருத்தர் அங்கே வந்தார். குருவிடம் போனார்.

“குருவே, புத்தர் என்றால் என்ன?” என்று கேட்டார். குருவுக்கு ஒன்றும் புரியவில்லை.

அவர் உண்மையான குருவாக இருந்தார் அல்லவா, அவருக்கு புரியும்? திருதிருவென்று முழித்தார்.

இந்த நேரம் பார்த்து, இந்த சீடர்களும் எங்கேயோ போய் விட்டார்களே... என்ன செய்வது? உதவிக்கு யாராவது வரமாட்டார்களா என்று சுற்றும் முற்றும் பார்த்தார்.

வந்தவர் இதனைக் கவனித்தார்.

ஏதோ புரிந்து கொண்டவர் போன்று அடுத்த கேள்வியைக் கேட்டார்.

“தர்மம்’ என்றால் என்ன சுவாமி?” என்றார்.

குருவுக்கு மிகவும் சங்கடமாகிவிட்டது.

நம்முடைய நிலைமை இப்படியாகி விட்டதே!

இக்கட்டில் மாட்டிக் கொண்டோமே! என்று நினைத்தபடி விட்டத்தைப் பார்த்தார். அதன் பின் குனிந்து தரையைப் பார்த்தார். அப்படியே உட்கார்ந்து கொண்டார்.

வந்தவர் உடனேயே அடுத்த கேள்விக்குப் போய்விட்டார்.

“தியானம் என்றால் என்ன?” என்றார்.

பாவம் என்ன பண்ணுவார் அந்தக் குரு. பேசாமல் கண்களைக் கெட்டியாக மூடிக் கொண்டார்.

இவர் இப்படிச் செய்தும் கூட வந்தவர் சளைக்கவில்லை. இன்னொரு கேள்வியையும் கேட்டார்.

“ஆசீர்வதம் என்றால் என்ன?” என்றார்.

இவர் பார்த்தார். இப்படியே போனால் இவர் கேள்வி கேட்பதை நிறுத்த மாட்டார் என்று நினைத்துக் கொண்டு “ எனக்கு ஒன்றுமே தெரியாது என்ற பாவனையில் இரண்டு கைகளையும் விரித்துக் காட்டினார். வந்தவரின் முகத்தில் மகிழ்ச்சி. மனநிறைவு. ஏதோ எல்லாம் புரிந்து கொண்டவர் போல் அங்கிருந்து புறப்பட்டுப் போனார்.

வழியில் அந்தக் குருவின் சீடர்கள் இரண்டு பேரையும் சந்தித்தார். “உங்கள் குருவைத்தான் பார்த்து விட்டு வருகிறேன்” என்றார்.

“என்ன நடந்தது?” என்று கேட்டார்கள். இவர் விபரமாகச் சொன்னார்.

“உங்களுடைய குரு எவ்வளவு பெரிய ஞானி தெரியுமா? புத்தர் என்றால் என்ன? என்று கேட்டேன். அதற்கு அவர் அப்படியும் இப்படியும் பார்த்தார். அதற்கு என்ன அர்த்தம் தெரியுமா? மக்கள் புத்தரை அங்குமிங்கும் தேடுகிறார்கள். உண்மையில் அவரை அங்கேயும் இங்கேயும் தேடிக் கண்டுபிடிக்க முடியாது” என்பதை அவர் செய்கை மூலம் உணர்த்தினார்.

அதன்பின் “ தியானம் என்றால் என்ன” என்று கேட்டேன். கண்ணை மூடிக்கொண்டார். கண்ணை மூடிக்காணும் அற்புதம் அதுவென்பதைப் புரிந்து கொண்டேன்.

கடைசியாக ஆசீர்வதிக்கப்படுவது பற்றிக் கேட்டேன். கைகளை நீட்டி உதவுவதுதான் அதுவென்பதை இருகைகளையும் விரித்து உணர்த்தினார்.

எவ்வளவு பெரிய மகான் அவர்? என்று சொல்லிவிட்டு அவர் பாட்டுக்கு போய்விட்டார்.

சீடர்கள் அதற்குப் பின் மெதுவாக குருவிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் குருவுக்குக் கோபம் வந்துவிட்டது.

“ அடேய்... பாவிகளா? எங்கே போய்த் தொலைஞ்சீங்க? நான் ஒரு ஆளிடம் மாட்டிக் கெண்டு என்ன பாடு பட்டேன் தெரியுமா?” என்றார்.

இது போலத் தான், நாம் சாதாரண மனிதர்களின் புற வேடங்களிலேயே மயங்கிப் போய் விடுகிறோம். அவர்களுடைய பேச்சு-செய்கை-பார்வை இவற்றிலெல்லாம் ஏதோ பெரிய தத்துவம் இருப்பதாக நினைத்துக் கொள்கிறோம்.

உண்மையிலேயே அந்தத் தத்துவங்கள் யாருக்குச் சொந்தம். அவர்களுக்கில்லை. நமக்குத் தான் சொந்தம். நாம் தானே அதைக் கற்பித்துக் கொண்டோம்.

நம்மை நாம் அடையாளம் கண்டு கொள்வதில்லை.

நாம் யார் என்பது நமக்குப் புரிவதில்லை.

அது தான் இன்றைக்கு நடக்கிறது. அதனால் தான் அடுத்தவர்களைத் தேடி ஓடிக்கொண்டிருக்கிறோம்.

சில வீடுகளில் கூட இது போன்ற சைகைகள் உண்டு.

சில குடும்பத் தலைவர்கள் தினமும் காலையில் கண்ணைக் கெட்டியாக மூடிக்கொண்டு கையிரண்டையும் விரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து தியானம் செய்வது வழக்கம். எதற்காக அப்படிச் செய்கிறீர்கள் என்று ஒருத்தரைப் பார்த்துக் கேட்டேன்.

“இந்த மாதம் வாங்கிய சம்பளம் முழுவதும் தீர்ந்து போய்விட்டது. இனிமேல் என்கையில் ஒன்றுமேயில்லை. புதிதாக எதுவும் செலவு வைத்து விடாதே என்பதைத் தான் உள்ளங்கை இரண்டையும் விரித்துக் காட்டி உணர்த்துகிறேன்” என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# “சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி” விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி-2010

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் வானிலை அவதான நிலையம், கமநல அபிவிருத்தித் திணைக்கள விவசாயிகள் கூடம் ஆகியன இணைந்த வளாகத்தில் “சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிய சூழல் பாதுகாப்புடனான விவசாய உற்பத்தி” என்னும் தொனிப் பொருளில் விவசாய விலங்கு வேளாண்மைக் கண்காட்சி-2010 எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை நடைபெறும்.

ஆரம்ப நிகழ்வு வடக்குமாகாண மாகாண விவசாயப் பணிப்பாளர் க.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இக் கண்காட்சியின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ். தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விவசாய காணி, கால்நடை, கடற்றொழில் அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி அமைச்சின் செயலாளர் செ.பத்மநாதன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்ப்பாண பிராந்திய ஆணையாளர் (வ.மா) திருமதி ப. சிவலிங்கம், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி கலாநிதி திருமதி. சிவமதி சிவச்சந்திரன், சுதேச மருத்துவ மாகாணப் பணிப்பாளர் (வ.மா) திருமதி. எஸ். துரைரட்ணம்,

மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர். வே.தி செல்வரத்தினம், கால்நடை உற்பத்தி சுகாதார உதவிப்பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.ம. பற்றிக் டிறஞ்சன், விவசாய ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி. செ.விஜயரட்ணம், நீர்ப்பாசன எந்திரி கே.கருணாநிதி, வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி வே.புஸ்பநாதன், தென்னைப் பயிர்ச் செய்கை பிராந்திய முகாமையாளர் வி.மகாலிங்கம், பனைவள அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் பா.லோகநாதன், போறூட் நிறுவன வடபிராந்திய பணிப்பாளர் திருமதி றெனி கேற்ஸ், ஐ.நா.அ.திட்ட தலைமை அதிகாரி கு.வி.நிசாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

மேலும், இக்கண்காட்சியில் யாழ். மாவட்டத்தின் 11 பிரதேச செயலாளர்களும் 4 உதவி அரசாங்க அதிபர்களும் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளார்கள். (எ-2)

# இராசி பலன்

*13.09.2010*
*(ஆவணி 28, திங்கட்கிழமை)*
*பஞ்சமி காலை 6.37 மணிவரை*
*சஷ்டி பின்னிரவு 5.32 மணிவரை*
*விசாகம் முன்னிரவு 8.10 மணிவரை*
*இராகுகாலம் 7.33-9.03 மணிவரை*
*சுபநேரம் 12.03-1.33 மணிவரை*
*சஷ்டி விரதம்.*

**மேடம்** தடைகள் விலகி தனலாபம் பெருகும், தேகநலன் சீராகும், திறமையானவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர். மதியத்திற்கு பின் காரியத் தடைகள் ஏற்படலாம்.

**இடபம்** குடும்ப சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் அதிகரிக்கலாம், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்** வியாபார விருத்தி ஏற்படும் நாள், மாற்றினத்தவரின் ஒத்துழைப்பு கிடைக்கும், ஆரோக்கியம் சீராகும், கடனை மீளளிக்கும் வாய்ப்புண்டு, தேவையற்ற பகைகள் மாறும்.

**கடகம்** தொழிலில் புதிய முதலீடுகளைச் செய்யும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு கிட்டும், நீண்டநாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையில் உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், வாகனத்தை பழுது பார்க்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடி கொள்ளும் நாள், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், கைமாற்றாக கொடுத்த பணம் திரும்பி வரலாம், முருகன் வழிபாடு முன்னேற்றம் வழங்கும்.

**துலாம்** புத்திசாலித்தனமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும், பொருளாதார நிலை உயரும், பெரிய மனிதர்களின் தொடர்பு ஏற்படும், உத்தியோக உயர்வுண்டு, நல்ல செய்திகள் வீடு வந்து சேரும்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்ல நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், உறவினர் பகை அகலும், ஞாபக மறதியுண்டு, தேக நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** சுப செலவுகள் அதிகரிக்கும், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் வளர்ச்சிக்கு அனுபவமானவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், மாலை நேரம் பயணம் ஏற்படலாம்.

**மகரம்** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்து கொள்ளும் நாள், கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும், உத்தியோக சிறப்புண்டு, நண்பர்கள் வலிய வந்து உதவி செய்வர்.

**கும்பம்** பயணங்கள் அனுகூலம் தரும், புதிய முயற்சிகளில் அக்கறை காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்கள் மீண்டும் கைகூடும் வாய்ப்புண்டு, தேகநலன் சீராகும்.

**மீனம்** உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மனஸ்தாபங்கள் மறையும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் மந்த நிலையுண்டு, மனதில் உற்சாகம் பிறக்கும்.

வளவன்

# மின்தடை பற்றிய அறிவித்தல்

உயர் அழுத்த மின் மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகளை செய்யும் பொருட்டு காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின் பாவனையாளர்களுக்கு இலங்கை மின்சாரசபையின் யாழ் பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

இதில் நாளையும், எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமையும் சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை மற்றும் காங்கேசன் துறை உயர் பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய பிரதேசங்களிலும், எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம் மற்றும் பட்டணப் பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும் எனவும் வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## இலத்திரனியல் சுகாதார திட்டம் நடைமுறை

பொதுநலவாய நாடுகளில் மிகவும் வினைத்திறன் மிக்க சுகாதார சேவையினை ஏற்படுத்துவதற்காக இலத்திரனியல் சுகாதாரத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பாக பொது நலவாய நாடுகளின் மாநாடொன்று இன்று திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறுகின்றது.

பொது நலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் அலுவலகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்வுக்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமை தாங்குகின்றார். (ஸ்ரீ-7)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 110 | 90 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 80 |
| தக்காளி | 100 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 80 | 70 |
| கரட் | 80 | 120 | 50 |
| பூசணி | 40 | 50 | 30 |
| புடோல் | 40 | 40 | 25 |
| வாழைக்காய் | 80 | 70 | 40 |
| சின்ன வெங்காயம் | 70 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 35 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 60 |
| பயற்றங்காய் | 80 | 80 | 40 |
| லீக்ஸ் | 120 | 130 | 110 |
| பீற்றூட் | 40 | 50 | 30 |
| கறிமிளகாய் | 80 | 80 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 |
| போஞ்சி | 120 | 140 | 110 |
| கத்தரிதம்புள்ள | 70 | 90 | 50 |
| கீரை - 1 பிடி | 30 | 25 | 20 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 35-40 | 30 | 30 |




வெளிநாட்டில் உயர்கல்வியை மேற்கொள்வதற்கான ஆலோசனை வழங்கும் நிறுவனமான "தாரகா ஓவர்சீஸ்" நிறுவனம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கேணல் குமுத வடுகொட மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

# மலேசியாவுக்கு பயணம் மேற்கொண்ட சாரணியர்கள் நாடு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலிருந்து 30 சாரணியர்களும் ஆறு ஆசிரிய சாரணியர்களும் மலேசியா சென்று பல அனுபவங்கள் பெற்று நாடு திரும்பியுள்ளனர்.

இரு வாரகாலமாக மலேசியாவில் ஜாலான் டத்தோத்தில் அமைந்துள்ள சாரணிய இயக்கத்திற்கு சொந்தமான கட்டடத்தில் தங்கியிருந்து பயிற்சி அனுபவங்களைப் பெற்று கடந்த 8 ஆம் திகதி வந்து சேர்ந்துள்ளனர்.

இப் பயிற்சியின் போது நேரம் தவறாமை, ஒழுங்கு முறையில் வாழ்தல், குழுவாக செயற்படுதல் போன்ற புதிய அனுபவங்களைப் பெற்றுள்ளோம் என பயிற்சிக்குட்பட்ட வழிகாட்டிகள் கூறினர்.

இவ்விதமான பயணத்திற்கும் பயிற்சிக்கும் யாழ். மாவட்ட சாரணிய வழிகாட்டிகள் இணைப்பாளர் திருமதி நீலயோஜினி தர்ம குலசிங்கம் தலைமையில்சென்றமை தமக்கு சிறப்பை தந்தது எனவும் குறிப்பிட்டனர்.



கடந்த மூன்று தசாப்தமாக தமிழ் மாணவ மாணவிகள் குறிப்பாக மாணவிகள் தமது விசேட உடற் திறன்களை வெளிக்காட்ட முடியாதிருந்தது. விளையாட்டு, சங்கீதம், நடனம் ஆகிய தனிப்பட்ட செயற் பாடுகள் குழுச் செயற்பாடுகளை தேசிய மட்டத்திலும் வெளிநாட்டு பிராந்திய மட்டங் களிலும் பெண்கள் குழுவாகச் சென்று வந்த ஓர் பயணமாகக் கொள்ளலாம். விளையாட்டுக்களில் , இசைநிகழ்வுகளில் குழு நிகழ்வுகள் நிறையக் கற்றுத் தருபவைபல. அது போல் சாரணியம் வாழக் கற்றுக் கொடுக்கும் ஓர் குழுச் செயற்பாடாகும். (ஸ்ரீ)

# தொப்புள் கொடி அறுக்காத நிலையில் ஆண் சிசு வீதியில் இருந்து மீட்பு !

## கொக்குவில் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் உள்ள செம்பியன் வீதியில் தொப்புள் கொடி கூட அறுக்கப்படாத நிலையில் பிறந்த சில மணிநேரமேயான ஆண் சிசு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.



நேற்று காலை 6மணியளவில் சாக்கினால் சுற்றப்பட்ட நிலையில் இருந்த இச் சிசுவை வீதியில் சென்ற ஆட்டோ சாரதி ஒருவர் அச் சிசுவின் அழுகுரல் கேட்டு சாக்கினை திறந்து பார்த்த போதே சிசுவைக் கண்டுள்ளார்.

உடனடியாக அருகில் உள்ளவர்களுக்கு சிசு தொடர்பாக தகவலளித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவலளிக்கப்பட்டது.

அவர்கள் மூலமாக சிசு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-6)

# வடமராட்சி கிழக்கு பகுதிக்கு நாளை மீள்குடியேற்ற அமைச்சர், ஆளுநர் விஜயம்

(பருத்தித்துறை)

வடமராட்சிக் கிழக்குப் பகுதிக்கு மீள் குடியேற்றஅ அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் நாளை செவ்வாய்க்கிழமை விஜயம் செய்யவுள்ளனர். இவர்கள் மீள்குடியமர்வு சம்பந்தமான நடவடிக்கைகள் மற்றும் மருதங்கேணிப் பகுதியின் அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைகளை அவதானிக்கவுள்ளனர்.

அதேவேளை அன்றைய தினம் அதிகாரிகள் சந்திப்பு ஒன்றை நடத்தி அப்பகுதியின் தேவைகள் குறித்து ஆராயவுள்ளனர்.

அத்துடன் நீண்டகாலமாக யுத்தத்தினால் சேதமடைந்திருந்த மருதங்கேணி பிரதேசபை அலுவலகமும் மீள்குடியமர்வு அமைச்சரினால் திறந்துவைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகள் துரிதமடைந்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-7-10)

# கணனி கற்கைநெறி பயிற்சி வகுப்பு

(தெல்லிப்பளை)

கரித்தாஸ் -கியூடெக் நிறுவனத்தின் நிதியுதவியுடன் தெல்லிப்பளைப் பிரதேச செயலக விதாத வள நிலையத்தினால் ஆறுமாத கால சான்றிதழ் கற்கைநெறி இலவச கணனி வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது.

இக் கற்கை நெறியானது வாரத்தில் திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை காலை 9 மணிதொடக்கம் மதியம் 1.30 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இவ்வகுப்பில் Ms Office ,DTP ஆகிய கணனி கற்கைநெறிகள் கற்பிக்கப் படுகின்றது. இதில் 22 மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, பயிற்சியின் முடிவில் இவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (2-53)

## வடமராட்சி கிழக்கில்

# ப.நோ.கூ. சங்கத்தின் 4 கிளைகள் திறப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கமானது தனது 4 கிளை நிலையங்களை அப் பகுதிகளில் ஆரம்பித்துள்ளது.

இக்கிளை நிலையங்கள் உடுத்துறை வடக்கு உடுத்துறை மகாவித்தியாலயத்திற்கு அருகாமை மற்றும் செம்பியன்பற்று தெற்கு மருதங்கேணி ஆகிய பகுதிகளில் திறக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 2006 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக, இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்ததை அடுத்து மேற்படி சங்க கிளை நிலையங்கள் மூடப்பட்டு தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-7-64)




# தாளையடியிலுள்ள கடற்றொழிலாளர் சமாசத்தை மீள இயக்க நடவடிக்கை

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு தாளையடியில் அமைந்துள்ள கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகம் கடந்த இறுதி யுத்தத்தின் போது கடுமையாக சேதமடைந்துள்ளது.

இதில் அண்மையில் வடமராட்சி கிழக்கு பகுதியில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டதை தொடர்ந்து இடம்பெயர்ந்த நிலையில் உள்ள மேற்படி சமாசத்தின் நடவடிக்கைகளை சொந்த இடத்தில் ஆரம்பிப்பதற்கு சமாசத் தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதற்கமைய தாளையடியிலுள்ள தமக்குரிய கட்டடத்தை அவர்கள் நேற்று முன் தினம் நேரில் சென்று பார்வையிட்டனர்.

மேலும் மேற்படி கட்டடத்தை மீள அமைத்து சமாச நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு போரூட் நிறுவனமும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த நிலையில் , இன்னும் சில நாட்களில் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப் படவுள்ளதாக சமாசப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-7-64)

# மக்கள் மீள்குடியேறுவதையடுத்து வீதி புனரமைப்பு நடவடிக்கை


(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீள்குடியேறுவதையடுத்து யுத்தத்தினால் சேதமடைந்துள்ள வீதிகளை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை யாழ்.அரச அதிபர் மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை அப்பகுதியில் உள்ள சேதம டைந்த வீதிகளை புனரமைக்க தேவைப்படும் நிதி பற்றிய விபரங்களை விரைவாக தந்துத வுமாறு அரச அதிபர் வீதி அபிவிருத்தி திணைக்களத்திடம் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ். அரச அதிபரின் உத்தர வுக்கமைய திணைக்கள அதிகாரிகள் அப்பகுதி வீதிகளுக்கான நிதி மதிப்பீடு களை தயாரித்து வருவதாகவும் தெரிய வருகிறது. (ஸ்ரீ-7-10)





யா/ மகாஜனக் கல்லூரியின் ஆனந்த நடராஜப் பெருமான் ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேக நிகழ்வின் காட்சிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்- பாலமுரளி)

# பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்குவது தொடர்பிலான ஆரம்ப நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு அடுத்த வருடத்திற்கான உத்தியோக பூர்வ சீருடைகளை வழங்குவது தொடர்பிலான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

அதற்காக உள்ளூர் புடைவை உற்பத்தியாளர்களிடம் தேவையான துணி வகைகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன குறிப்பிட்டார். இதற்கு தேவையான நிதி கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

உள்நாட்டு புடவை உற்பத்தியாளர்களிடம் இருந்து தேவையான துணிவகைகள் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டு புடைவைத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாகவும் அதற்கமைய துணிகளைப் பெற்று அவற்றை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினர்.

(ஸ்ரீ-7)

# கருணை உள்ளம் படைத்தவர்களில் இலங்கையர்கள் முதலிடம்

உலகில் கருணை உள்ளம் படைத்தவர்களின் வரிசையில் இலங்கையர்கள் முன்னணியில் திகழ்வதாக அண்மைய ஆய்வுத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அறக்கட்டளைகள் மற்றும் நன்கொடைகளை வழங்குவதில் இலங்கையர்கள் கூடுதல் நாட்டம் காட்டுவதாக ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

நன்கொடைகளை வழங்குவதில் இலங்கையர்கள் உலக நாடுகளின் வரிசையில் எட்டாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் தெற்காசிய பிராந்திய வலயத்தில் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளனர்.

ஏனைய தெற்காசிய பிராந்திய நாடுகள் இந்த வரிசையில் நூறாம் இடத்தையேனும் பிடிக்கவில்லை என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

பிரித்தானியாவை மையமாகக்கொண்டு இயங்கி வரும் ஓர் அறக்கட்டளை ஒன்றினால் நடத்தப்பட்ட நன்கொடை சுட்டெண் தொடர்பான ஆய்வில் இந்தத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மொத்தமாக 153 நாடுகளில் வாழும் மக்களிடம் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளதாக ஆய்வுகளை நடத்திய அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

நன்கொடை வழங்குவதற்கு அதிகளவு நாட்டம் காட்டுவோர் வரிசையில் அவுஸ்திரேலியர்கள் முதலிடத்தை வகிக்கின்றனர். (ஸ்ரீ-2)

# நீதிமன்றத்தில் வேடுவத் தலைவர்

காணிக்கான ஏகபோக உரிமையுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் வகையிலான எழுத்துமூல ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு றதுகலை வேடுவத் தலைவருக்கு மொனராகலை மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த மாதம் 29ஆம் திகதிக்குள் எழுத்துமூலமான ஆவணத்தை றதுகலை வேடுவ சமூகம் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதிபதி கூறினார்.

றதுகலையில் தமது சமூகத்திற்குச் சொந்தமானதென வேடுவத் தலைவர் கூறும் காணிக்கு உரிமை கோரி கண்டியை வசிப்பிடமாகக் கொண்ட ஒருவர் மொனராகலை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பான விசாரணையின் போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலத்தில் தனது தந்தை மற்றும் தனது முன்னைய சமூகத்தினர் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் இந்த நிலம் தமக்கே சொந்தமாகும் எனவும் றதுகலை வேடுவ சமூகத் தலைவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இந்திய அரசின் உதவியுடன் வன்னியில் 10 ஆயிரம் வீடுகள் கட்டும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

வடக்கில் மீளக் குடியமர்த்தப்படும் மக்களுக்கென இந்திய அரசின் உதவியுடன் 50 ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் திட்டத்தின் முதற்கட்டமாக 10ஆயிரம் வீடுகளை கட்டும் பணிகள் இன்னும் இரு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மற்றும் வவுனியா மாவட்டங்களிலிருந்து 10ஆயிரம் வீடுகளுக்கான பயனாளிகளை தெரிவு செய்வதற்கான விசேட கூட்டம் இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளதாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

ஆளுநரின் தலைமையில் வன்னி மாவட்ட அரச அதிபர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டு பயனாளிகளை தெரிவு செய்யவுள்ளனர். 10 ஆயிரம் வீடுகளில் விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் அங்கவீனமானவர்கள் இரண்டாவதாக தெரிவு செய்யப்படவுள்ள னர்.

கிளிநொச்சியில் யாழ்ப்பாணத்துக்கு 5 ஆயிரம் வீடுகளும் மன்னார். வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு 5ஆயிரம் வீடுகள் என்ற அடிப்படையில் முதற்கட்டமாக 10 ஆயிரம் வீடுகள் கட்டப்படவுள்ளன.

பயனாளிகளைத் தெரிவு செய்த பின்னர் ஜனாதிபதி செயலணி முழுமையான அறிக்கையை இலங்கையிலுள்ள இந்திய தூதுவரிடம் கையளிக்கும் . அதனைத் தொடர்ந்து துரிதகதியில் வேலைகள் ஆரம்பமாகும் என ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

இதேவேளை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் இதுவரை நிறைவு செய்யப் பட்டுள்ள அபிவிருத்தி பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆராயும் கூட்டம் யாழ் நகரில் நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் நடைபெறும் இக்கூட்டத்தில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார். மேலும் வன்னி மாவட்டம் உட்பட வட மாகாண அரச அதிபர்கள், வடமாகாண அரச உத்தி யோகத்தர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ஸ்ரீ-2)

# தெருவிளக்குகளின்றி சிரமப்படும் மக்கள்

(பொலிகண்டி)


வதிரி ஆலங்கட்டைச் சந்தி ஓமேஸ் விளையாட்டு மைதானத்தை அண்டிய பகுதி மற்றும் அதற்கு இடைப்பட்ட பகுதி ஆகியவற்றில் உள்ள வீதிகளில் தெரு விளக்குகள் இன்றி இரவு வேளைகளில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் இப்பகுதிகளில் ஏற்கனவே மின்சார சபையால் 3 தெருவிளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. அவை கடந்த 2006ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தம் காரணமாக உடைக்கப்பட்டுள்ளன. இவை இன்னமும் திருத்தப்படாமல் காணப்படுகின்றன.


எனவே இந்நிலையில் அப்பகுதியில் உள்ள வீதிகள் இரவு வேளையில் இருள் சூழ்ந்திருப்பதால் சில வீதி விபத்துக்களும் ஏற்பட்டுள்ளதாக இப்பகுதி வாழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஸ்ரீ-7-48)





பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 40 ஆவது வருடப் பூர்த்தியையொட்டி ஜனாதிபதி தங்கக் கிண்ணத்திற்கான யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம் பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கரவெட்டி பிரதேச செயலகமும் கோப்பாய் பிரதேச செயலகமும் மோதிக்கொண்டதைப் படங்களில் காணலாம்.






யாழ்.கல்வி வலய அதிபர்களுக்கான பாட சாலை மேம்பாட்டு நிகழ்ச் சித்திட்ட செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ். இந்துமகளிர் கல்லூரி ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெற்றது. இதில் வடமராட்சி கல்வி வலய திட்டமிடல் பணிப்பாளர் எஸ். நந்தகுமார் செயல மர்வு நிகழ்த்து வதையும் கலந்து கொண்ட அதிபர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- என்.குமார்)

## காஷ்மீர் பிரச்சினை குறித்து இன்று விவாதிக்கப்படவுள்ளது

காஷ்மீர் பிரச்சினை குறித்து விவாதிப் பதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்



தலைமையில் இன்று திங்கட்கிழமை பாது காப்பு அமைச்சரவைக் கூட்டம் நடைபெற வுள்ளது.

காஷ்மீரிலும் தொடர்ந்து இடம்பெற்று வரும் வன்முறைச்சம்பவங்கள் தொடர்பி லும் காஷ்மீரில் நடைமுறையில் உள்ள ஆயுதப்படை சிறப்புச்சட்டத்தை மீளப்பெறு வது தொடர்பிலும் இக் கூட்டத்தில் விவாதிக் கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் காஷ்மீரில் அமைதி திரும்ப அம் மாநில முதல்வர் பரூக் அப்துல்லா வைத் துள்ள கோரிக்கைகள் தொடர்பிலும் மேற்படி கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

(ஸ்ரீ-2)

# உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டமூலம் அடுத்த மாதம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

முற்றிலும் தொகுதி வாரி முறையிலான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கு ஏற்றவாறு உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறை வேற்றப்படுமென்று தேர்தல் மறுசீர மைப்புக் கான பாராளுமன்றத் தெரிவுக்குழு வின் தலைவரான அமைச்சர் தினேஸ் குணவர் தன தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் புதிய உறுப்பினர் கள் தெரிவாகியிருக்க வேண்டும். அதற் கமைய இன்னும் ஐந்து மாதங்களில் தேர்தல் நடைபெறவுள்ளது. தொகுதிவாரி முறையி லான திருத்தச் சட்டமூலத்திற்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

இதற்கமைய அடுத்ததாகப் பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட விருக்கிறது. புதிய சட்ட திருத்தின்படி உள் ளூராட்சி மன்றத் தேர்தல் தொகுதிவாரியாக நடத்தாப்படும் 70 வீத உறுப்பினர்கள் தொகு திவாரியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

30 வீதம் விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படுவார்கள் தேர்தலில் தோல்வி யுற்ற கட்சிகளிலிருந்து இந்த 30 வீத உறுப் பினர்கள் தெரிவாகுவார்கள். சில தொகுதி களில் இரட்டை அல்லது மூன்று அங்கத்த வர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் உள்ளூ ராட்சி மன்றமொன்றுக்கு ஒரு பட்டியல் சமர்ப் பிக்கப்படவேண்டும். தொகுதிக்குத் தொகுதி ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் வெவ்வே றான வேட்பாளர் பட்டியல்கள் சமர்ப்பிக்கப் படவேண்டும்.

வாக்குகள் கட்சியின் சின்னத்திற்கே அளிக் கப்படும் 50 வீதத்துக்கும் கூடுதலான வாக்கு களைப் பெறும் கட்சியின் செயலாளர் குறித்த உள்ளூராட்சி மன்றத்திற்கான தலை வரையோ அல்லது பிரதித் தலைவரையோ அதே போன்று நகர முதல்வரையும் பிரதி முதல்வரையும் தெரிவு செய்ய முடியும்.

50 வீதத்துக்கும் குறைவான வாக்கு களைப் பெற்றால் சபை கூடிய பின்னர் இவர் கள் தெரிவு செய்யப்படுவார்கள் குறித்த உள் ளூராட்சி மன்றமொன்றின் வரவு செலவுத் திட்டம் தோல்வியுறும் பட்சத்தில் அதன் தலை



வரோ அல்லது முதல்வரோ இராஜினாம்ச் செய்ய வேண்டும்.

இந்தத் திருத்தங்களுடனான முதலா வது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற் றப்பட்டதும் தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியாகுமென்றும் அமைச்சர் கூறி னார்.

இதேவேளை அடுத்த வருட நடுப்பகுதி யில் வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறு மென்றும் அமைச்சர் குணவர்தன தெரிவித் தார்.

மீள் குடியேற்றம் இன்னும் சில மாதங்க ளில் நிறைவு செய்யப்பட்டுத் தேர்தல் நடத்தப் படுமென்றும் அமைச்சர் கூறினார். (ஸ்ரீ-2)

# பென்சேகா வெளியிட்ட கருத்து குறித்து அரசாங்கம் கவனம்

18ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு எதிராக நாட்டில் இராணுவக் கிளர்ச்சி ஏற் படக்கூடிய அபாயம் காணப்படுவதாக முன் னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்து தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக ஊடக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

18ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக சர்வாதிகார ஆட்சி ஏற்படக் கூடிய அபா யம் காணப்படுவதாகவும் அதற்கு எதிராக கிளர்ச்சிகள் வெடிக்கலாம் எனவும் முன் னாள் இராணுவத் தளபதி ஜெனரல் பொன் சேகா அண்மையில் நாடாளுமன்றில் தெரி வித்திருந்தார்.

இராணுவ சூழ்ச்சித்திட்டமோ அல்லது கிளர்ச்சியோ வெடிக்கக் கூடுமென்ற பொன் சேகாவின் கூற்று தொடர்பில் அரசாங்கம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகாவின் அடி மனதில் நீண்ட காலமாக இருந்த குரோத உணர்வின்வெளிப் பாடே இவ்வா றான கருத்துக் களின் மூலம் புல னாவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன் சேகாவின் கரு த்து தொடர்பில் எடுக்கப்படவேண் டிய நடவடிக் கைகள் குறித்து அரசாங்கம் கவ னம் செலுத்தி வரு வதாக அவர் தெரி வித்துள்ளார்.

(ஸ்ரீ-2)


## பதவி உயர்வு



12, சீனியர் ஒழுங்கை, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வரும், தற்போது யாழ்ப்பாணக் குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதி மன்றப் பதிவாளராகக் கடமைபுரியும் திரு.துரையப்பா சுரேந்திரன் 26.08.2010ஆம் திகதியில் இருந்து நீதிமன்றப் பதிவாளர் சேவையின் I ஆம் தரப்பதிவாளராக நீதிச்சேவை ஆணைக் குழுவினால் பதவி உயர்த்தப்பட்டுள்மையினைப் பாராட்டி வாழ்த்து கின்றோம்.

இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவராவார்.

நண்பர்கள்

(2438)


## இலங்கை மின்சாரசபை - யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நாட்களில் உயர் அழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகளை செய்யும் பொருட்டு காலை 8.00 மணிமுதல் மாலை 5.00மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
| --- | --- |
| 14.09.2010 (செவ்வாய்க்கிழமை) | சுன்னாகம்,குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி. |
| 16.09.2010 ( வியாழக்கிழமை) | சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி. |
| 18.09.2010 ( சனிக்கிழமை) | உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ்.மாநகர சபைப்பகுதி. |

(சி-1150)

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும் இலங்கை மின்சாரசபை"



யா/ கொட்டடி நமசிவாய மற்றும் யா/நாவாந்துறை R.C.T.M.S பாடசாலைகளில் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து கல்வி கற்கும் மாணவர்களுக்கான உளசமூக சுற்றுப்படுத்தல் செயலமர்வு நேற்று முன்தினம் நாவாந்துறைR.C.T.M.S பாடசாலையில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையடன் நடைபெற்றது. இதில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை வளவாளர் திருமதி எ.நளாயினி செயலமர்வு நிகழ்த்துவதையும் கலந்து கொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# புனர்வாழ்வளிக்கப்பட்ட புலி உறுப்பினர்கள் புலனாய்வுப் பிரிவினரால் மீண்டும் கைது !

(கொழும்பு)

சரணடைந்த படையினரால் தடுக்கப்பட்டு, புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் சில உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் மீண்டும் புலனாய்வுப் பிரிவினரல் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுவரையில் பத்துக்கு மேற்பட்டோர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என உறவினர்கள் முறையிட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற இறுதிப் போரின் போது கைதுசெய்யப்பட்ட மற்றும் சரணடைந்த விடுதலைப்புலிப் போராளிகள் படையினரின் புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு· அரசாங்கத்தினால் மன்னிப்பளித்து விடுவிக்கப்பட்டு வரும் விடுதலைப் புலிகளிகளின் முன்னாள் உறுப்பினர்களில் சிலர் மீண்டும் புலனாய்வுப் பிரிவினால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளோரில் ஆண், பெண் முன்னாள் போராளிகள் மற்றும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களாகச் செயற்பட்டதாகக் கருதப்படுவோரும் அடங்குகின்றனர்.

நெடுந்தீவு, பருத்தித்துறை, கிளிநொச்சி, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் இருந்து இந்தக் கைதுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டுக் கொண்டு செல்லப்பட்ட சந்தேக நபர்களைப் பற்றிய தகவல்களைப் பெறுவதில் சிரமங்களைத் தாம் எதிர்நோக்கியுள்ளதாக கைதுசெய்யப் பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் கைது செய்யப்படும்போது சட்டரீதியான முறைப்படி தகுந்த ஆதாரங்களுடனும் பொலிஸ் தரப்பினருடனும் வந்தே படையினர் மேற்படி சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைக்காக அழைத்துச் சென்றனர் என்றும் கைதுசெய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் கைதுசெய்து கொண்டு செல்லப்பட்டமை தொடர்பாகவும் கைது செய்யப்பட்டோரின் நிலையைப் பற்றியும் யாரிடம் முறைப்பாடு தெரிவிப்பது என்று தமக்குத் தெரியவில்லை என்றும் உறவினர்கள் கூறுகின்றனர்.

படையினரால் சந்தேகத்தின் பேரில் செய்யப்பட்டோரில் உடல் உறுப்புகளை இழந்தவர்கள், குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்கள் என்போரும் உள்ளனர்.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் கைதுகளால் விடுவிக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்படும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் குடும்பத்தினரிடையே பதற்றமும் கவலையும் தோன்றியுள்ளன. (ச-2)

# வேலணை பகுதியில் பனாட்டு பதனிடல்

வேலணை பகுதியானது கற்பகதரு (பனை) அதிகமாகக் காணப்படும் பிரதேசமாகும்.

இதனால் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் பனையின்மூலம் பெறப்படும் பொருட்களை கூடுதலாக உற்பத்தி செய்வதைக் காணலாம். இதன்படி தற்போது பனம்பழம் விழும் சீசன் என்பதால், இங் குள்ள அநேகமான மக்கள் விழும் பனம் பழத்தை பிழிந்து எடுத்து, அதை பதனிட்டு காயவைத்து பனாட்டு உற்பத்தியில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது.

மேலும் நயினாதீவுக்கு பயணம் செய்யும் தென்னிலங்கைப் பயணிகள் வேலணைப் பகுதியில் பகல் வேளைகளில் தரித்து நிற்பதுடன் ஒரு பனம் பழம் 75 ரூபா தொடக்கம் 100 ரூபா வரைக்கும் பணம் கொடுத்து வாங்கிச் செல்வதுடன் பனாட்டையும் விரும்பிக் கேட்டுவாங்கிச்செல்கின்றனர். (2-22)

# சைக்கிளோட்டப் போட்டியில் வெற்றியீட்டியோர்

நவாலி தென்றல் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிகழ்வை முன்னிட்டு நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் சைக்கிள் ஓட்டப் போட்டி நடைபெற்றது.

மேற்படி இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு, இதில் உள்ளூர் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை க.கோகிலன், யோ. பிரதீப், தே. பாஸ்கரன் ஆகியோரும் திறந்த போட்டியில் நா.ரகீம் (பண்டத்தரிப்பு), மா.ரஞ்சகுமார் (மானிப்பாய்), செ.லெனின்(நவாலி) ஆகியோரும் வெற்றியீட்டியுள்ளனர்.(ஸ்ரீ-2-7-26)

# கிறிஸ்மஸ் தீவிலுள்ள 2 இலங்கையர் மீதான குற்றச்சாட்டுக்கள் நீக்கம்

அவுஸ்திரேலியா, கிறிஸ்மஸ் தீவில் இடம்பெற்ற கலவரத்தில் பங்கேற்றிருந் ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்த இலங்கை யைச் சேர்ந்த புகலிடம் கோரும் இருவருக்கு சில வாரங்களுக்குள் விசா வழங்கப்படவிருக்கிறது.

அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரணையாளர்கள் கைவிட்டிருப்பதையடுத்து இந்த இருவருக்கும் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

கிறிஸ்மஸ் தீவின் தடுப்பு நிலையத்தில் இடம்பெற்ற கலவரத்தில் ஆயுதங்களை வைத்திருந்ததாக இந்த இருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. பேர்த் நீதிவான் நீதிமன்றத்தில் 8 தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற வழக்கில் இந்த இருவரும் உள்ளடங்கிருந்தனர்.


ஏனைய 6 பேருக்கும் எதிரான விசாரணை தொடர்ந்தும் இடம்பெறவுள்ளது.

இந்த 6 பேரில் கணேசலிங்கம் சுந்தரலிங்கம் என்பவர் எதிர் மனுத்தாக்கல் செய்துள்ளார். அதில் அவர் வெற்றிபெற்றால் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் கைவிடப்படும்.

ஜெனிற்றன் மகேந்திரன் மற்றும் நிஷாந் குணரட்ணம் ஆகிய இருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுகளே நீக்கப்பட்டிருப்பதாக குடிவரவு குடியல்வு பிரஜாவுரிமை திணைக்கள பேச்சாளரை மேற்கோள்காட்டி த அவுஸ்திரேலியன் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# பெரும்பான்மை ஆதரவிருந்தால் கட்சித்தலைமை பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயார்

## சஜித் பிரேமதாச தெரிவிப்பு



(கொழும்பு)

பெரும்பான்மையினரின் ஆதரவிருந்தால் கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின்ஆதரவு காணப்பட்டால், கட்சித்தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சி ஆதரவாளர்கள் பெரும் அதிருப்தியுடன் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களினால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஓர் புதிய பிரவாகத்திற்கு வழியமைக்கப்படவேண்டும் எனவும், கட்சியின் சகல தரப்பினரையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையில் கட்சியில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கட்சியில் தற்போதுநிலவி வரும் சர்ச்சை நிலைமைகளுக்கு இரண்டு வார காலங்களில் தீர்வுமுன்வைக்கப்படும் என கட்சித்தலைமை அறிவித்துள்ளது. (2)

# அரசுக்கு ஆதரவளித்த எதிரணி எம்.பி.க்களின் அபிவிருத்தி திட்டங்களுக்கு முன்னுரிமை

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

18ஆவது அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு ஆதரவளித்த எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களினால் தங்களது தேர்தல் தொகுதிகளில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக சிங்கள ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ள பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிகளை கோரவில்லை எனவும் தமது தேர்தல் தொகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றே கோருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்ந்து அதற்கான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படும் என அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பல்வேறு வழிகளில் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்குகளிலிருந்து விடுவித்தல், பணம் மற்றும் வாகனங்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு வரப்பிரசாதங்களுக்கு அடிமையாகி குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு ஆதரவளித்துள்ளதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. (ஸ்ரீ-2)

# கோத்தபாய உள்ளிட்ட உயர்பாதுகாப்பு அதிகாரிகள் சீனாவுக்கு விஜயம்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட உயர் பாதுகாப்பு அதிகாரிகள் சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ, கடற்படை மற்றும் விமானப் படை உயரதிகாரிகளும் இந்த விஜயத்தில் இணைந்து கெண்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய, ராஜபக்ஷ தலைமையிலான உயர்மட்ட இராஜதந்திரிகள் குழு ஒரு வார காலம் தங்கியிருந்து சீன அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு தரப்பு பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளல் தொடர்பில் இந்த விஜயத்தின் போது கூடுதல் கவனம் செலுத் தப்பட உள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் நடைபெற்ற காலத்தில் இலங்கைக்கு அதிகளவு இராணுவத் தளபாடங்களை சீனா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சாட்சியமளிக்க சமுகமளிக்குமாறு மனித உரிமை அமைப்புகளுக்கு அழைப்பு

## உண்மையை கண்டறியும் குழு கடிதம்

(கொழும்பு)

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் விசாரணைகளில் சாட்சியமளிக்குமாறு சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச அனர்த்த குழு ஆகியவற்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள விசாரணைகளில் பங்குபற்றுவதற்காக தமது பிரதிநிதிகளை அனுப்பி வைக்குமாறு குறித்த அமைப்புகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளில் பங்கேற்பதற்காக மனித உரிமைகள் அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு கடந்த ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுள்ளது.

தமது பிரதிநிதிகளை அனுப்பி வைப்பதற்குப் பொருத்தமான தினங்களை முன் கூட்டியே அறிவிக்குமாறு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அழைப்பு விடுக்கப்பட்ட மூன்று நிறுவனங்களுமே இதுவரையில் தங்களது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளியிடவில்லை, எனவும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அழைப்பு கிடைக்கப் பெற்றதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் யுத்தம் நிறைவடைந்த காலப்பகுதி வரையில் தமிழீழ விடுதலைப்புலிகளும் இராணுவத்தினரும் யுத்தக் குற்றச் செல்யகளில் ஈடுபட்டதாக மனித உரிமை கண்காணிப்பகமும், சர்வதேச அனர்த்தக்குழுவும் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதே வேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சாட்சியமளிக்குமாறு உண்மையைக் கண்டறியும் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

சாட்சியமளிப்பதற்கு உசிதமான நேரமொன்றை அறிவிக்குமாறு உண்மையைக் கண்டறியும் குழு சம்பந்தனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யுத்த நிறுத்த காலத்தில் பிரதமர் பதவியை வகித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விசாரணைகளுக்கு அழைக்கப்படக் கூடிய சாத்தியம் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றதெனத் தெரிவிக்கப்படுகிறது. கால்நடை வள அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் உள்ளிட்ட சிலர் இன்றைய தினம் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவிடம் சாட்சியமளிக்க உள்ளனர். (எ-2)

## சீரற்ற மின் விநியோகத்தால் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்பு

அண்மைக் காலமாக வடமராட்சிப் பகுதியில் அடிக்கடி மின்சாரத்தடை ஏற்படுவதாக அப்பகுதி வாழ்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

முன்னறிவித்தல் எதுவும் இன்றி திடீரென மின்சாரத்தடை ஏற்படுவதால் மின் பாவனையாளர்கள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகின்றனர். குறிப்பாக மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணிவரையான நேரங்களில் ஏற்படும் மின்சாரத் தடையால் கல்வி கற்கும் மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (2-7-48)

# தன்னார்வ தொண்டு நிறுவனம் எதனையும் கே.பி. நிறுவவில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன், தன்னார்வத் தொண்டு நிறுவனம் எதனையும் நிறுவவில்லை என தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கை அபிவிருத்தி செய்யும் நோக்கில், குமரன் பத்மநாதன் தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்றை நிறுவியுள்ளதாக வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேர்டோ எனப்படும் வடக்கு- கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம் என்ற பெயரில் குமரன் பத்மநாதன் தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்றை அமைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படும் தகவல்கள் குறித்து தமக்கு எதுவும் தெரியாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பெயரில் எந்தவொரு தன்னார்வத் தொண்டு நிறுவனமும் பதிவு செய்யப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குமரன் பத்மநாதன் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவருக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அதனைத் தவிர வேறு எதுவும் தமக்குத் தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு- கிழக்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதி உதவிகள் கிடைக்கப் பெற்று வருவதாகவும் இதனைப் பயன்படுத்தி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்றை அமைத்துள்ளதாகவும் அண்மையில் குமரன் பத்மநாதன் தெரிவித்திருந்தார்.

குறிப்பாக, அந்த நிறுவனம் குறித்த அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட பதிவு இலக்கம், வவுனியா விலாசம் என்பவற்றையும் அண்மைய செவ்வியில் குமரன் பத்மநாதன் தகவல்களை வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இலங்கைக்கு அதிக உதவிகளை வழங்கிய நாடுகளின் வரிசையில் சீனா முதலிடம்

(கொழும்பு)

இலங்கைக்கு அதிகளவான உதவிகளை வழங்கிய நாடுகளின் வரிசையில் சீனா முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

வழமையாக இலங்கைக்குப் பெருந்தொகை உதவி வழங்கி வந்த ஜப்பானை பின்தள்ளி சீனா இந்த இடத்தைப் பிடித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த 2009 ஆம் ஆண்டில் இலங்கைக்கு அதிகளவு நிவாரணங்களை வழங்கிய தனிநாடு என்ற பெருமையை சீனா பெற்றுக்கொண்டுள்ளது.

கடந்த ஆண்டில்இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொண்ட மொத்தக் கடனுதவியில் 53 வீதமான உதவிகளை சீனா வழங்கியுள்ளதாகவும், மொத்தமாக 2221 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# போட்டித் தன்மைப் பட்டியலில் இலங்கை 62 ஆவது இடத்தில்

(கொழும்பு)

உலகப் பொருளாதார மன்றத்தின் 2010 தொடக்கம் 2011 ஆம் ஆண்டிற்கான போட்டித் தன்மை அறிக்கையின் பிரகாரம் இலங்கை 62 ஆவது இடத்தினைப் பெற்றுள்ளது.

கடந்த வருடம் 79 ஆவது இடத்திலிருந்த இலங்கை 17 படிகள் முன்னேற்றமடைந்து இந்த இடத்தினை எட்டியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த அறிக்கையின் பிரகாரம் கடந்த வருடம் மூன்று தசம் ஐந்து வீதமாகவிருந்த தனிநபர் வருமானம் இம்முறை ஐந்து வீதமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடத்தின் செயற்பாடுகள் நாட்டில் முக்கியமான சில முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதனைச் சுட்டிக்காட்டுவதுடன் இலங்கை இம்முறை அனைத்துப் பொது நிர்வாகத் துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளது.

பாதுகாப்பு மட்டம் 106 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ள போதிலும் பயங்கரவாத அச்சுறுத்தலற்ற நாடுகளில் இலங்கை 134 ஆவது இடத்திலுள்ளது.

சுகாதாரம் மற்றும் அடிப்படைக் கல்வி ஆகியவற்றில் 12 நாடுகளைப் பின்தள்ளி 35 இடத்திற்கும் பொருளாதாரச் சந்தைகளில் 13 இடங்கள் முன்னேறி 52 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

வர்த்தகக் கலப்படத்தில் 39 ஆவது இடமும் புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்வதில் 40 வது இடமும் இலங்கைக்கு கிடைத்துள்ளதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. முக்கியமான மூன்று பிரிவுகளில் நாடு பின்னடைவினைச் சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடன் மற்றும் பற்றாக்குறை என்பன அதிகரிப்பு சேமிப்பு வீதக் குறைவு குறைந்தளவிலான நிலுவை ஆகியவை காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் நாடு 101 ஆவது இடத்திற்குப் பின் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் பிரகாரம் சுவிற்சர்லாந்து முதலாவது இடத்திலும் சுவீடன் இரண்டாவது இடத்திலும் சிங்கப்பூர் மூன்றாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)




[illegible] அனுசரணையுடன் பிள்ளைநேயப் பாடசாலை செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான [illegible]கான செயலமர்வு நேற்று முன்தினம் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்றது. இதில் யாழ்.கல்வி [illegible]ல் பணிப்பாளர் ச.ரவீந்திரன் செயலமர்வு நிகழ்த்துவதையும் கலந்துகொண்ட ஆசிரியர்களின் [illegible]குதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# சர்வதேச சக்திகளின் தலையீட்டினை தடுப்பதற்கு திருத்தம் வழிவகுக்கும்

## அமைச்சர் விமல் வீரவன்ச



நாட்டின் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கின்ற மேலும் பல விடயங்கள் அரசியலமைப்பில் புகுத்தப்பட்டுள்ளன. எதிர் காலத்தில் அவற்றிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். 18 ஆவது திருத்தமானது சர்வதேச சக்திகளின் தலையீட்டினை தடுப்பதற்கு ஏற்ற வகையிலான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கே வழி வகுக்கின்றது என்று அமைச்சர் விமல் வீரவன்ச கடந்த 8ஆம் திகதி சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற 18ஆவது திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் விமல் வீரவன்ச இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

18ஆவது திருத்தம் தொடர்பில் பலரும் பலவித கருத்துக்களைக் கூற முடியும். அது அவர்களது பார்வையின் பிரகாரம் அமைந்ததாகும். எனினும் 18ஆவது திருத்தமானது அரசாங்கத்தைப் பலப்படுத்தியுள்ளது.

17 ஆவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பின் அது அரசாங்கத்தை பலவீனப்படுத்தியிருக்கும். ஆனால் அது இப்போது தடுக்கப்பட்டுள்ளது.

சட்டங்களைப் புறக்கணித்து செயற்படுவோரே சர்வாதிகாரிகளாவர். ஆனால் இங்கு சட்டங்கள் இயற்றப்படுகின்றமையை சர்வாதிகாரம் என்று வர்ணிக்கின்றனர். வெளிநாட்டு சக்திகள் எமது நாட்டுக்குள் தலையீடு இல்லாத வகையிலான கட்சியை நிலை நிறுத்துவதே 18ஆவது திருத்தத்தின் நோக்கமாகும்.

இதனைப் புரிந்து கொள்ள முடியாதவர்களே எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றனர். 17ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

ஆனாலும் 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட் அரசியலமைப்பில் இந் நாட்டிற்கு ஜனநாயகத்துக்குப் பாதகமான பல விடயங்கள் புகுத்தப்பட்டள்ளன. அவற்றிலும் எதிர்காலத்தில் திருத்தம் கொண்டு வரப்படவேண்டும் என்றார். (ஸ்ரீ-2)

# போதைப் பொருளை நாட்டுக்குள் கடந்த முற்பட்ட பாகிஸ்தானியர் கைது

ஹாலீஸ் போதைப் பொருளை நாட்டுக்குள் கடத்த முற்பட்ட பாகிஸ்தானிய பிரஜை ஒருவரை போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக ஆயிரத்து இருநூறு கிராம் எடையுடைய ஹாஸீஸ் போதைப் பொருளை நாட்டுக்குள் கடத்த முற்பட்டதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

57 வயதான குறித்த நபர் சுற்றுலா வீசா மூலம் நாட்டுக்குள் பிரவேசிக்க முற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சந்தேக நபரிடம் விசாணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# சகல பொலிஸ் பிரிவுகளிலும் இலஞ்சஊழல் ஒழிப்பு குறித்த விசேட பிரிவுகளை அமைக்க முடிவு

நாட்டின் சகல பொலிஸ் பிரிவுகளிலும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு தொடர்பான விசேட பிரிவுகளை அமைப்பதற்கு பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய தீர்மானித்துள்ளார்.

அதற்கிணங்க நாட்டில் 42 பொலிஸ் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் இந்த விசேட இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவுகள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாக பொலிஸ் அதகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் மூலம் குறித்த பிரதேசத்தில் புதை பொருள் உள்ளிட்ட சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பாக உடனடி சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நடவடிக்கைகளில் இணைப்பு தொடர்புகளை மேற்கொள்வதற்காக பொலிஸ் தலைமையகத்தின் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவீந்திர ஹரவிட்ட நியமிக்கப்பட்டுள்ளார். குறித்த சகல பிரிவுகளையும் கண்காணிப்பதற்கு அமைப்பு ரீதியான குற்றச்செயல்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுரா சேனநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். என அந்தப் பொலிஸ் அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-3)

# இடம்பெயர் மக்களின் மீள் குடியேற்றம்; தமிழ்க் கட்சிகள் கலந்துரையாடல்

(கொழும்பு)

வன்னி மாவட்டத்திலிருந்து யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் கொழும்பில் நேற்று முன்தினம் தமிழ்க் கட்சிகள் ஒன்றியத்தின் சில கட்சிகள் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தியுள்ளன.

இடம் பெயர் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் அவர்கள் வேறிடங்களில் மீள் குடியேற்றப்படக்கூடாது எனவும் தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் மற்றும் புளோட் ஆகிய கட்சிகள் இந்தக் கலந்துரையாடலின்போது தமது தீர்மானத்தை முன் வைத்தன.

அத்துடன் மட்டக்களப்பில் அண்மையில் கடத்தப்பட்ட மாநகரசபை உறுப்பினர் தொடர்பிலும் இதன் போது கலந்துரையடப்பட்டன.

கூடிய விரைவில் தனது கணவன் கண்டு பிடிக்கப்படாவிட்டால், தீக்குளிக்கத் தயார் என மட்டு மாநகரசபை உறுப்பினரின் குடும்பத்தவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# 13.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- 1503 - மைக்கலாஞ்சலோ புகழ்பெற்ற டேவிட் என்ற சிலையை உருவாக்கும் பணிகளை ஆரம்பித்தார்.
- 1759 - கனடாவின் கியூபெக் நகருக்கருகாமையில் இடம்பெற்ற போரில் பிரித்தானியப் படைகள் பிரெஞ்சுப் படைகளைத் தோற்கடித்தன.
- 1788 - நியூயோர்க் நகரம் ஐக்கிய அமெரிக்காவின் தற்காலிக தலைநகராக அறிவிக்கப்பட்டது.
- 1791 - பதினாறாம் லூயி மன்னன் பிரான்சின் புதிய அரசியலமைப்பை ஏற்றுக் கொண்டான்.
- 1814 - பிரித்தானியர் மேரிலாந்தின் பால்ட்டிமோர் நகரைக் கைப்பற்ற எடுத்த முயற்சி தோல்வியடைந்தது.
- 1847 - மெக்சிக்கோ - அமெரிக்கப் போர்: அமெரிக்கப் படையினர் மெக்சிக்கோ நகரைக் கைப்பற்றினர்.
- 1898 - ஹனிபல் குட்வின் செலுலோயிட் புகைப்படச் சுருளைக் கண்டு பிடித்தார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: தென்னாபிரிக்கப் படையினர் ஜெர்மனியின் நமீபியா மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1923 - ஸ்பெயினில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மிகுவேல் பிறிமோ டி ரிவேரா ஆட்சியைக் கைப்பற்றினான்.
- 1939 - கனடா இரண்டாம் உலகப்போரில் குதித்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி எகிப்தினுள் நுழைந்தது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியின் குண்டுகள் பக்கிங்ஹாம் அரண்மனையைச் சேதப்படுத்தியது.
- 1943 - சியாங் காய் ஷேக் சீனக் குடியரசின் ஜனாதிபதியானார்.
- 1948 - இந்தியப் படைகள் ஐதராபாத்தை இந்திய ஆளுமையின் கீழ் கொண்டு வந்தன.
- 1949 - இலங்கை, இத்தாலி, பின்லாந்து, ஐஸ்லாந்து, ஜோர்தான் ஆகிய 6 நாடுகள் ஐ.நாவில் அங்கத்துவம் பெற சோவியத் ஒன்றியம் தடை செய்தது.
- 1953 - நிக்கிட்டா குருஷேவ் நாட்டின் உயர் பதவியான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஆனார்.
- 1968 - அல்பேனியா வார்சா ஒப்பந்தத்தில் இருந்து விலகியது.
- 1971 - நியூயோர்க்கில் சிறைக்கைதிகளின் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த பொலிஸார் எடுத்த நடவடிக்கையில் 42 பேர் கொல்லப் பட்டனர்.
- 1989 - தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கெதிரான மாபெரும் போராட்டம் டெஸ்மண்ட்டுட்டு தலைமையில் இடம்பெற்றது.
- 1994 - யுலிசெஸ் விண்கலம் சூரியனின் தென் முனையைக் கடந்தது.
- 1999 - மொஸ்கோவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 119 பேர் கொல்லப்பட்டனர்.

## பிறப்புகள்

- 1916 - ரூவால் டால், எழுத்தாளர் (இ. 1990)
- 1969 - ஷேன் வோர்ன், அவுஸ்திரேலியத் துடுப்பாளர்

## இறப்புகள்

- 1598 - இரண்டாம் பிலிப்பு, ஸ்பானிய, போர்த்துக்கல், இலங்கை மன்னன் (பி.1526)
- 1996 - டுப்பாக் ஷகூர், அமெரிக்க ராப் இசைக் கலைஞர் (பி.1971)
- 2009 - அரங்க முருகையன், தமிழறிஞர், எழுத்தாளர் (பி.1932)

**1993 - நோர்வேயில் இடம்பெற்ற இரகசியத் தொடர்ப் பேச்சுவார்த்தைகளை அடுத்து பாலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத்துக்கும் இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ரபீனுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் எட்டப்பட்டது.**



# ஈழத்தவர் வரலாறு

34

## 5. யாழ்ப்பாண இராச்சியம் ஆரியச்சக்கரவர்த்திகள்

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

கி.பி.1302 இல் யாழ்ப்பாண அரசின் மன்னனாக வரோதய சிங்கையாரியன் (செகராசசேகரன் - 3) முடிதரித்தான். அவன் தனது இராச்சியத்தில் வாழ்ந்த சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தினான். இவன் காலத்தில் வன்னியர்கள் ஏற்படுத்திய குழப்பம் அடக்கப்பட்டது. கி.பி.1325இல் வரோதயன் இறக்க, அவனது மைந்தன் மார்த்தாண்ட சிங்கையாரியன் (பரராசசேகரன் - 3) அரச கட்டிலேறினான். இவன் காலத்திலும் வன்னியர் குழப்பம் செய்து அடக்கப்பட்டனர். இந்த அரசன் காலத்து இபன்பட்டூடா என்ற முஸ்லிம் பயணி யாழ்ப்பாணம் வந்தான். அங்கே ஆரியச் சக்கிரவர்த்தியின் திரண்ட கடற்படையையும் செல்வத்தையையும் கண்டு அதிசயித்தான்.

கி.பி.1347 இல் குணபூசணசிங்கையாரியன் (செகராசசேகரன் 4) முடிசூடினான்.

இவன் காலத்தில் யாழ்ப்பாணவரசில் அமைதியும் சமாதானமும் நிலவியது. இவன் பின் இராச் சியத்தின் அரசனான விரோதய சிங்கையாரியன் (பரராசசேகரன் - 4) காலத்தில் நாட்டில் அமைதி நிலவிய போதிலும், வன்னியர் கலகம் இருந்தது. 'விரோதயன், பாண்டிய மன்னன் சந்திரசேகரன் என்பானுக்குப் படையுதவி, இழந்து பாண்டி நாட்டையும் முடியையும் மீட்டுக் கொடுத்துள்ளான்.

**தென்னிலங்கை மீது படை**

கி.பி.1380 ஆம் ஆண்டில் விரோத சிங்கையாரியனின் மகன் சயவீரசிங்கையாரியன் (செகராசசேகரன் - 5) யாழ்ப்பாண அரசின் சிங்காசனமேறினான். 'சயவீர சிங்கையாரியன் காலத்தில், முத்துக் குளித்தல் சம்பந்தமாக எழுந்த பிரச்சினையில், தென்னிலங்கை மன்னர்களில் ஒருவனான புவனேகபாகு என்பானைப் போரில் வென்று, திறைபெற்று மீண்டான்.



யாழ்ப்பாணக் கோட்டை

பன்னிரண்டு வருடங்கள் தென்னிலங்கை மன்னர்கள் யாழ்ப்பாண அரசனுக்குத் திறை செலுத்தினர் எனினும், கோட்டையின் அரசனாகவிருந்த அழகக்கோனார் என்பான் திறை செலுத்த ஒரு கட்டத்தில் மறுத்ததோடு, சிங்கைநகர் அரசனால் இவனிடம் திறை வாங்கும் படியனுப்பப்பட்ட ஏவலாளர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றான். அதனால் சயவீர சிங்கையாரியனின் பெரும்படை தரைமார்க்கமாகக் கம்பளைக்கும், கடல் மார்க்கமாகக் கோட்டைக்கும் அனுப்பப்பட்டது. கம்பளையரசனான புவனேகபாகு அப்படைக்கு எதிர் நிற்க வஞ்சி ஓடி ஒளிந்தான். கடற்படை தோல்வி கண்டு திரும்ப நேர்ந்தது.

கி.பி.1410 ஆம் ஆண்டளவில் ஜயவீர சிங்கையாரியன் இறக்க, குணவீரசிங்கையாரியன் (பரராசசேகரன் 5) முடி தரித்தான் இவன் காலத்தில் பராக்கிரமபாகு என்ற சிங்கள அரசன் திறைசெலுத்த மறுத்தான். அதனால் தென்னிலங்கைக்குப் படையெடுத்துச் சென்று சிங்களவரசைத்தோல்வி காண வைத்து, திறை பெற்று மீண்டான். இப்படையெடுப்புக்கு விஜயநகர மன்னன் படை கொடுத்து உதவியுள்ளான்.

**கனகசூரியசிங்கையாரியன்**

குணவீரசிங்கையாரியனின் பின்னர் கி.பி.1440ல் அவனது மகனான கனகசூரிய சிங்கையாரியன் (செகராசசேகரன் 6) அரசனானான். யாழ்ப்பாண இராச்சியவரலாற்றில் இவனது காலம் குறிப்பிடத்தக்கது.

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

ஏனெனில் கி.பி.1215 ஆம் ஆண்டிலிருந்து 1440 ஆம் ஆண்டுவரை ஆரியச் சக்கிரவர்த்திகள் கட்டிக் காத்த வடவிலங்கையின் விலை மதிப்பில்லாத சுதந்திரத்தை, தென்னிலங்கை மன்னனிடம் பறிகொடுத்தமையால் ஆகும். (தொடரும்)

**ஈழத்தவர் வரலாறு என்னும் தலைப்பில் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான் ) எழுதிய தொடரில் நாளை முதல் சிங்கைப் பரராசசேகரன் தொட்டு சங்கிலி செகராசசேகரன் வரை என்னும் தொடர் பிரசுரமாகும்.**

# இந்திய மொழிகளின் மொழி பெயர்ப்பு

04



### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

கே.மலர்விழி
முனைவர் பட்ட ஆய்வாளர்
பெங்களூர் பல்கலைக்கழகம்

1869 ஆண்டில் தமிழின் 'கதாமஞ்சரி' கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (Kathe Kathana Page No. 16)

கன்னடத்தில் டாக்டர். எஸ்.வித்யாசங்கர் என்பவர் தமிழில் சுந்தரமூர்த்தி நாயனார் கதையை கன்னடத்தில் நம்பியண்ணனரகளெ என்ற நூலோடு ஒப்பிட்டு ஆய்வுகள் எழுதியுள்ளார்.

20ஆம் நூற்றாண்டில் தமிழ் - கன்னட மொழி பெயர்ப்புத் துறைக்காக எல். குண்டப்பா. டி.வி.ஜி. ஆர் நரசிம்ஹாசாரியர், ஜி.பி.ராஜரத்தினம், பாஷா பநீனிவாஸ், முனிசுவாமி, மற்றும் எஸ்.கெ.ராமசந்திரராவ், சேஷநாராயண் ஆகியோர் அளப்பெரிய பங்கினை செய்துள்[illegible]ணர்.

குறிப்[illegible]ட்டு சொல்லத்தக்க வகையில் கல்கியி[illegible]ார்த்தீபன் கனவு நூலை, கன்னடத்தில்[illegible] மற்றும் சிறந்த மொழி பெயர்ப்[illegible]ரு.சேஷநாராயண் அவர்களால் [illegible]ர்க்கப்பட்டது. இதுவே, கன்னடத்தில் [illegible] தமிழ் நாவல் மொழி பெயர்ப்[illegible] இவரின் மொழிபெயர்ப்பு வளர்ச்சிக்கு பெருந்தூண்டுதலாக இருந்தவர் கலைமகள் பத்திரிகை ஆசிரியர் கி.வா.ஜெகந்நாதன் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்களின். 'தென்பாண்டி சிங்கம்' என்ற நாவலையும் அசோக மித்திரனின். 'அப்பாவின் சிநேகிதர், மு.வா.வின் 'அகல்விளக்கு', தோப்பில் மஹம்மத மீரானின் 'ஒரு கடலோர கிராமத்தின் கதை' போன்ற நூல்களையும் தமிழிலிருந்து கன்னடத்திற்கு மொழி பெயர்த்துள்ளார்.

கன்னட எழுத்தாளரான எஸ்.எல். பைரப்பாவின் 'தாண்டு' மற்றும் 'மாஸ்தி சண்ணகதெகளு' தமிழில் சிறுகதைகள் என்ற தலைப்பிலும் திரு.சேஷநாராயண அவர்களால் கன்னடத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மற்றும் 'காவேரி' என்ற நூலை தமிழ், கன்னடம் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வழங்கியுள்ளார்.

இவரை அடுத்து, கன்னடத்திலிருந்து தமிழுக்கு கிரீஷ் கார்னாட் அவர்களின். நாக மண்டலம், லங்கேஷின் கல்கரையும் நேரம், பலிபீடம் மற்றும் பசித்தவர்கள், அக்னி யும் மழையும் மதுரைகாண்டம் போன்ற சிறுகதைகளையும், நாவல்களையும் பாவண் ணன் அவர்கள் மொழி பெயர்ப்பு செய்துள்ளார்.

சமய தத்துவ நூல்களை அதிகமாக பிண்டிகநவிலே நாராயணஸ்வாமி அவர்கள் தமிழில் இருந்து கன்னடத்திற்கு மொழி பெயர்ப்பு செய்கிறார். நாலாயிர திவ்விய பிரபந்தங்கள், குறை ஒன்றும் இல்லை ஆகியனவும், தற்போது 11 திருமுறைகள், (ஒன்பதாம் திருமுறை தவிர) 30 பாசுரங்கள் கோதையின் பாதை என்ற நூலையும் மொழி பெயர்ப்பு செய்து கொண்டிருக்கிறார்.

இவர்களைத் தவிர, இறையடியான், டாக்டர்.தமிழ்செல்வி, டாக்டர்.ஜெயலலிதா, ஆகியோர் மற்றும் பேராசிரியை மலர்விழி, ... புதுமைபித்தன், கவியரசு வைரமுத்து, மா. ராஜேந்திரன், அசோகமித்திரன், ஜெயகாந்தன், டாக்டர்.சூர்யகாந்தன், டாக்டர்.ராமகுருநாதன், போன்றவர்களின் கதை, கவிதைகள் மற்றும் ஒன்பதாம் திருமுறை (www.thevaram.org. constructed and maintained by Maravanpulavu K. Sachithananthan) போன்ற படைப்புகளை மொழிபெயர்ப்பு செய்து, கன்னட உலகிற்கு பல சேவைகளை செய்து வருகின்றனர்.

**மொழி பெயர்ப்பின் நடை**

மொழிபெயர்ப்பு என்பது ஒரு கலை, புனிதமான செயல். மூலமொழியின் புனிதம் கெடாமல் இன்னொரு மொழிக்கு மொழி பெயர்ப்பது தவத்திற்கு ஒப்பானது.

புதுமைப்பித்தன் அவர்கள் கதைகளை மொழி பெயர்ப்பது தொடர்பாக கூறுகையில், மொழி பெயர்ப்பு என்றால் கூடியவரை பாஷை வளைந்து கொடுக்கக் கூடியவாறு ஒரு குறிப்பிட்ட அந்நிய நாட்டு சரக்கை அதன் சாரம் கெடாமல் எடுத்து தருதலே ஆகும் என்றார்.

ஒரு மூலக்கதையின் தலைப்பும், பாத்திரத்தின் பெயரும் கதையில் எவ்வளவு செல்வாக்கு செலுத்துகிறதோ அதே செல்வாக்கு இன்னொரு மொழியிலும் செலுத்துவதே மொழி பெயர்ப்பின் வெற்றியாகும்.

பிறமொழி மற்றும் வேற்று மாநில கதைகளை மொழி பெயர்க்கும் போது அந் நாட்டு பெயர்களை மாற்றாமல் அதன் மண் வாசனையோடு மொழி பெயர்ப்பதால் அப் படைப்பு பூரணத்துவமாய் வாசகர்களை சென்றடையும் அன்றி உண்மையான படைப்பாளியின் உணர்வும், சொல்ல வந்த விடயங்களும் திசைமாறிப்போகும்.

எடுத்துக்காட்டாக ம.ராஜேந்திரன் அவர்களின்' திருட்டு ' என்றதமிழ்சிறுகதை கன்னடத்தில் மொழிபெயர்த்தபோது தமிழுக்கே உரித்தான வட்டார மற்றும் கிராமத்து மண்வாசனை நிரம்பிய கலாசார பண்பாட்டு அம்சங்கள் மாற்றமில்லாமல் அதே உணர்வோடு மற்றொரு மொழியின் கிராமிய மண் வாசனையோடு ஒன்றுசேர்வதால் மொழி பெயர்ப்பு வெற்றி அடைகிறது.

இச்சிறுகதையில் வரும் சிலம்பாயி என்ற பாத்திரத்தின் பெயர் கன்னட வட்டார மொழியோடு வேறுபட்டாலும் பாத்திரத்தில் முக்கியத்துவமாய் , குறிப்பிட்ட பிரதேச வட்டார மொழிப்பிரயோகத்தையும் மண்வாசனையையும் சுமந்து வருவதால் , பெயர்மாற்றம் இன்றி அதேபெயரில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (தொடரும்)

# தமிழை வளர்ப்பதற்கான அரசியல் அதிகாரம் தேவை!

2011 ஜனவரியில் கொழும்பில் சர்வதேசத் தமிழ் எழுத்தாளர் மாநாடு நடக்கப்போகிறது. "சர்வதேசரீதியாகப் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் எழுத்தாளர்களைத் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் ஒன்றிணைத்துக்



மஹிந்த ராஜபக்ஷ

கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் முயற்சி!" என்கிறது இந்த மாநாடு குறித்து ஏற்பாட்டாளர்களின் அறிக்கை. ஈழத் தமிழராயினும், புலம் பெயர்ந்த தமிழராயினும், தமக்கென ஒரு தாயகம் கண்டு, சுயநிர்ணய உரிமையைக் கொண்டாடுதல் தான் அவர்களின் விருப்பு. அதைத் தடுத்து, தமிழின அடையாளமே இல்லாமல் செய்கிற சிங்களப் பேரின வாதத்தின் மீதானது அவர்களது அளவு கடந்த வெறுப்பு.

இந்த இரு எல்லைகள் மட்டுமே தமிழினத்தின் விருப்பாகவும் வெறுப்பாகவும் இருக்க முடியும். இந்த யதார்த்தத்தைப் புறக்கணித்து, புலம்பெயர் தமிழ் எழுத்தாளர்கள் ஒன்றிணைதல் என்பது, புலம்பெயர்ந்த தமிழர்களில் தமிழீழ விடுதலைக்கு எதிராகவும், குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் நிற்கும் சிலரை ஒன்று கூட்டும் காரியமாகவே காண முடியும். மாநாட்டில் இலங்கை அரசினையோ, ஜனாதிபதியையோ விமர்சித்துப் பேச இயலுமா? அவ்வாறு விமர்சிக்காமல், தமிழை செழுமைப்படுத்த என்ன திட்டம் வைத்துவிட முடியும்?

உலக அளவில் பரந்து வாழுவதால், வாழுகிற நாடுகளில் உரிமைக்குரல் எழுப்புவதும், ஒன்றிணைப்பதும் இன்று சாத்தியமாகி உள்ளது. லண்டனில் ஓரிரு மாதங்கள் முன்னர் உலகத் தமிழர் பேரவை நடத்திய மாநாட்டில் வெளிவிவகாரத்துறை அமைச்சர் மில்லி பாண்ட், பிரிட்டன் பிரதமர் ஆகியோர் கலந்துகொண்டு, தமிழின உரிமை மீட்டெடுக்கப்பட வேண்டுமெனப் பேசினார்கள். உடனே, இலங்கை பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, "வெளிநாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் கிளைகளை வலுப்படுத்த சில வல்லரசுகள் முயற்சிகளை மேற்கொள்ளு கின்றன. இலங்கை, ஆசிய நாடுகளில் வலுவான நாடாக வளருவது சில சக்திகளுக்குப் பிடிக்கவில்லை!" என சீற்றத்தைக் கொட்டினார்.

ஈழத்தமிழர் பிரச்சினையைக் கையாண்டதில் உலக நாடுகளுக்கு அவரவர் நலனே முதன்மையாக வந்தது. அதைக் கையாண்டது குறித்து அவர்களுக்கு எந்தக் குற்ற உணர்வும் கிடையாது. ஓர் இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்பட்டதில், அவை பெரும் பங்கு வகித்ததை ஓரங்கட்டிவிட முடியாது. அந்த நாடுகளின் காதுகளில் மறுபடி நுழைக்கவும், அழுத்தம் தரவுமான கடமையினைப் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் செய்து வருகிறார்கள். அவர்களைக் குறிவைத்து சலனப்படுத்தும் காரியத்தை சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் செய்கிறார்கள் எனத் தோன்றுகிறது.

இன்றைய தகிக்கும் நிலையில், தமிழர் கோருவது தமிழை வளர்ப்பது அல்ல; தமிழை

## தமிழை வளர்ப்பதற்காக கொழும்பில் மாநாடாம்!


வளர்ப்பதற்கான அரசியல் அதிகாரத்தையே. சிங்களத்துக்கு சமமாகத் தமிழ் என்று நிறுவுவதற்கான அரசியல் அதிகாரத்தைக் கேட்பதே முதன்மைப் பணியே தவிர, உலகத்துக்கும் மேலாகத் தமிழைக் கொண்டுசெல்லும் பணி அல்ல. அதைச் செய்வதாகக் கூறித்தான் 350 கோடி செலவில் கோவையில் செம்மொழி மாநாடு எல்லா ஒப்பாரிகளையும் பாடி முடித்து விட்டதே! மொழி வளர்ச்சிக்கு அரசியல் உரிமையே முதல் தேவையாகும் என்பதை எவரும் உணர்வர். ஆட்சியில், நிர்வாகத்தில், கல்வியில், வேலை வாய்ப்பில் எல்லா இனங்களின் வாழ்வையும் நிர்ணயிப்பதில் சிங்களம் எதனால் சாத்தியமானது? அரசியல் மேலாண்மையில்தான். சிங்களத்துக்கு சமமாக தமிழ் மொழியை வளர்ச்சி செய்ய வேண்டுமெனில், மொழி வளர்ச்சிக்கு முன் நிபந்தனையாக ஈழத்து மண்ணில் அரசியல் அதிகாரம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்த அரசியல் பற்றி எண்ணிப் பார்க்காமல் மொழி வளர்ச்சிக்கு தலைகொடுக்கப் போகும் வித்தையை எவ்வாறு செய்யப் போகிறார்கள்?

தமிழர் பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல் என்ற போர்வையில் அரசுகள் வேறு ஒரு காரியத்துக்கு வழிவகை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அடிமை சமூகமாக ஆக்கப்பட்ட தமிழினத்தை - சிங்கள இனக்கலப்பில் செலுத்துவதுதான் அது. தமிழ் மக்களுக்கு இப்போது தேவைப்படுவது அதிகாரம் அல்ல; அபிவிருத்தி தான் என்று மொழி வளர்ச்சிக்கு வழி அமைப்பது போல் காட்டுவதும் ஓர் உத்தியாகும்.

"வளர்ச்சியை விரும்புகிற ஒரு தேசிய இனம், முதலில் தனது சுதந்திரத்தைப் பெற வேண்டும்.அவர்களுடைய தேசிய சுதந்திரம் இரண்டாம்பட்சம் என மற்றவர்கள் அவர்களுக்குக் கூறுவது தேவையற்ற வேலை!" என்று ஒரு சமயத்தில் போலந்து பற்றி மார்க்ஸும் ஏங்கல்ஸும் காவுட்ஸ்கிக்கு எழுதினார்கள்.

இவ்வாறான சிந்தனைகளால் வார்க்கப்பட்டு, வழி நடக்கும் ஈழத் தமிழர்களை தடம் மாறச் செய்ய, மொழி வளர்ச்சி, கலை, இலக்கிய வளர்ச்சி என்ற பெயரில் கொழும்புத் தமிழர்கள் முயலுகிறார்கள். தடம் மாறுதல் ஆபத்தானது. புலம்பெயர்ந்த எழுத்தாளர்களை, மொழி வளர்ச்சி, கலை, இலக்கிய மேம்பாடு என்று தடம் மாற்றி ஓடவைக்கும் பொறுப்பு கொழும்புத் தமிழர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது. தமிழர் கோருவது மொழி வளர்ச்சி, இலக்கிய வளர்ச்சி அல்ல என்பதை, ஈழத்து அரசியல் ஆய்வாளர் தனபாலா முன்வைக்கிறார்.

"தமிழர் கோருவது அபிவிருத்தி செய்வதற்கான அரசியல் அதிகாரத்தைத்தான். அதைத்தான் நாம் தீர்வு என்கிறோம்.அதாவது நாம் அபிவிருத்தியை நிராகரிக்கவில்லை. எமது வாழ்நிலை, பழக்க வழக்கம், பண்பாடு என்பவற்றுக்கு இசைவான அபிவிருத்தியை நாம் செய்வதற்கு எமக்கு அரசியல் அதிகாரம் வேண்டும் என்று கோருகிறோமோ தவிர தமிழினத்தை சிங்கள இனமாக கரைப்பதற்கு



பா.செயப்பிரகாசம்

ஏதுவான பண்பாட்டுக் கொலையை செய்யவல்ல சிங்கள மேலாதிக்க அரசியல் ஆதிக்கத்தை அல்ல. இங்கே இலங்கை அரசு ஒடுக்குமுறையை இன்னொரு தளத்துக்கு அபிவிருத்தி என்ற அழகான வார்த்தைப் பிரயோகம் மூலம் ராஜதந்திர ரீதியாக நகர்த்தியுள்ளது. எனவே, அரசியலைப் பற்றிக் கதைக்க மாட்டோம்; அபிவிருத்தி பற்றிக் கதைப்போம் என்பது ஒடுக்குமுறைக்கான இன்னொரு பெயராகும்!" என்கிறார்.


இந்திய அரசும் இலங்கை அரசும் கை கோர்த்து நடத்திய திரைப்பட விழாவைத் தோல்வி காணச் செய்த தமிழர் ஒற்றுமை நமக்கு ஒரு முன்மாதிரியாகும். இந்த ஒற்றுமை சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டைப் புறக்கணிக்கவும் அவசியப்படும் தருணம் இது. குறிப்பாக, தமிழக எழுத்தாளர்களை, புலம்பெயர் எழுத்தாளர்களை அழைக்கிறோம்.

"நடைறெப் போகும் கொழும்பு மாநாட்டில் நிச்சயமாக நாங்கள் இல்லை" என்போம்!

**இப்படிக்கு**
**பா.செயப்பிரகாசம்**

**ஜூனியர் விகடன்**

# பின்லேடனைப் பிடிக்கும் வரை ஓய்வில்லை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா சூளுரை!



(வோஷிங்டன்)

சர்வதேச பயங்கரவாதியும் அல்கொய்தா தலைவருமான ஒசாமா பின்லேடனை பிடிக்கும் அல்லது கொல்லும் வரை ஓயமாட்டோம் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா சூளுரைத்தார். இந்த விடயத்தில் அமெரிக்க அதிகாரிகளும் படைவீரர்களும் மனம் தளர்ந்து விடவில்லை.

பின்லேடனை தீர்த்துக்கட்டியே ஆக வேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நியூயோர்க்கில் அல்கொய்தா தீவிரவாதிகளால் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டதன் 9 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி அதிபர் ஒபாமா வோஷிங்டனின் வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ள அல்கொய்தா தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பது உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து செய்தியாளர்களுடன் மனம் திறந்து பகிர்ந்து கொண்டார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

நாங்கள் இஸ்லாமியர்களுக்கு எதிரான போரை நடத்தவில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிராகவே போர் நடத்துகிறோம். இஸ்லாம் என்ற போர்வையில் யாரெல்லாம் மனிதாபிமானமற்ற செயலில் ஈடுபடுகிறார்களோ அவர்களுக்கு எதிராகவே நாங்கள் போர் புரிகிறோம்.

கடந்த இரு ஆண்டுகளாக அல்கொய்தா தீவிரவாதிகளுக்கு எதிரான போரை தீவிரமாக நடத்தி வருகிறோம். இந்தப்போரில் நல்ல பலன் கிட்டியுள்ளது.

ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தான் பிராந்தியத்தில் புகலிடம் அடைந்துள்ள அல்கொய்தா பயங்கரவாதிகளால் நமது தாக்குதலை சமாளிக்க முடியவில்லை.

அந்த அமைப்பின் தலைவர் பின்லேடன் தாக்குதலுக்குப் பயந்து பூமிக்கடியில் பதுங்கியுள்ளார். எதற்கெடுத்தாலும் அறிக்கை விட்டு மிரட்டல் விடுத்து வந்த ஜவாஹிரியின் செயல்பாடும் முடங்கிவிட்டது. இதெல்லாம் அமெரிக்கப் படைக்கு கிடைத்த மாபெரும் வெற்றி.

பின்லேடனையும் ஜவாஹிரியையும் உயிருடன் பிடித்து விட்டாலோ கொன்று விட்டாலோ அமெரிக்காவின் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்து விடப்போவதில்லை. எனினும் இருவரையும் தீர்த்துக்கட்டுவதற்கு எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளிக்கிறது.

கடந்த 8 ஆண்டுகளாக பயங்கரவாதிகளுக்கு எதிரான போரை மேற்கொண்ட போதிலும் பயங்கரவாத அச்சுறுத்தலில் இருந்து நமது நாட்டை முழுமையாக காத்துள்ளோமா என்று கேட்டால் இல்லை என்றே சொல்ல முடியும். இதனால் மனம் துவண்டு விடத் தேவையில்லை.

பயங்கரவாதிகளின் எத்தகைய சவாலையும் சமாளிக்க மக்கள் தயாராக இருக்க வேண்டும்.

இப்பேதைய காலக்கட்டத்தில் ஈவிரக்கமின்றி பலரைக் கொல்வதற்கு ஒரு தனி நபரோ அல்லது ஒரு குழுவினரோ துணிந்து உயிரைத் துறக்கத் தயாராகவுள்ளனர் என்றே நினைக்கிறேன்.

இது போன்ற போக்கு மோசமானது. மனித சமுதாயத்துக்கே ஆபத்தானது என்றார்.

தொடர்ந்து பேசிய ஒபாமா வெளிநாடுகளுக்கு அயல்பணி ஒப்படைக்கும் உள்ளூர் நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகள் அளிக்கப்படாது என்பதில் அரசு உறுதியாகவுள்ளது என்றார்.

அதேசமயம் உள்நாட்டில் முதலீடுகளை செய்து வேலைவாய்ப்பு பெருக்க முயலும் நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகையை அளிக்க வேண்டும் என்பதிலும் அரசு ஆர்வமாக உள்ளது என்றார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள கடந்த 2 ஆண்டுகளாக அரசு கடுமையாகப் போராடி வருகிறது. பொருளாதாரத்தை மீண்டும் தூக்கி நிறுத்த வேண்டிய அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுவிட்டது.

எனினும் இதற்கு பெரிய அளவில் பலன் கிடைக்கவில்லை. பொருளாதாரம் ஆமை வேகத்தில் தான் வளர்ச்சி காண்கிறது. இதனால் மக்கள் விரக்தி அடைந்துள்ளனர்.

எனவே நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்தில் முதலீடு செய்வதற்கு உள்நாட்டு நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

ஆற்றல், ஆராய்ச்சி, தொழில்நுட்பம் , கல்வி ஆகியவற்றில் முதலீட்டை அதிகரிப்பதன் மூலமே சர்வதேச பொருளாதாரத்தில் அமெரிக்காவால் போட்டியிட இயலும் என்றார் ஒபாமா. (ஏ-

## ஈராக் மீது போர் தொடுத்தது சரியானது; பிரிட்டனின் முன்னாள் பிரதமர் தெரிவிப்பு



(லண்டன்)

ஈராக் மீது போர் தொடுத்தது சரியானதே. ஆனால் , போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நான் கண்ணீர் சிந்துகிறேன் என பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டோனி பிளேயர் கூறியுள்ளார். இவர் "எ ஜர்னி" என்ற பெயரில் சுயசரிதை புத்தகத்தை எழுதியுள்ளார். மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்தப் புத்தகம் சமீபத் தில் வெளியானது.

அதில் ஈராக் போர் குறித்தும் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும் அவர் கருத்து தெரிவித்துள்ளார். அவர் தமது புத்தகத்தில் கூறியவை வருமாறு,

ஈராக் மீது போர் தொடுத்தது சரியானது. அதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட அனைவருக்காகவும் நான் கண்ணீர் சிந்து கிறேன். ஈராக் ஜனாதிபதியாக இருந்த சதாம் உசேனை பதவியிலிருந்து இறக்கியதும் எங்கள் பாதுகாப்புக்கு அதிக அச்சுறுத்தல் ஏற்பட்டது. ஆனால், ஈராக் மீது போர் தொ டுத் ததற்காக நான் வருத்தப்ப டவில்லை.

மேலும் தற் போது பிரதமராக பதவி வகித்து வரும் கோர்டன் பிரவுண் விழிப்புணர்வு இல்லாதவர். உணர்வுக ளைப் புரிந்து கொள்ளத் தெரியாது. ஆனால் , அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ் புத்திசாலி மனிதர். அவர் உண்மையான இலட்சியவாதி. நேர்மையானவர்.

எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு. இரவு உணவுக்கு முன் ஜின் அல்லது ஒயின் குடிப்பது வழக்கம் என்று டோனி பிளேயர் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)



பிரேசிலில் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெற இருப்பதையொட்டி தலைநகர் ரியோ டி ஜெனிரோவில் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட பிரேசிலியன் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோஸ் செர்ரா.



[illegible] உலக சாதனையாக 4.410 கிலோ எடையுள்ள உலகின் [illegible]லேட் , ஆர்மேனிய தலைநகர் யேரேவனில் உருவாக்கப் [illegible]ளது. [illegible]திரிகையாளர்கள் சாப்பிட சாக்லேட்டை வெட்டும் [illegible] சாக்லேட்டை உருவாக்கியவர்களில் ஒருவர்.




## அவுஸ்திரேலியாவில் புதிய அமைச்சரவை



(சிட்னி)


மிகவும் குறுகிய பெரும்பான்மை பலத்தோடு மீண்டும் ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொண்ட அவுஸ்திரேலிய பிரதம மந்திரி ஜூலியா கில்லார்ட் தனது புதிய அமைச்சரவையை அறிவித்துள்ளார்.

ஜூலியா கில்லார்ட்டுக்கு முன் அவரின் தொழில் கட்சிக்குத் தலைமை தாங்கிய கெவின் ரூட் வெளி விவகார அமைச்சராகவும் முன்னாள் வெளி விவகார அமைச்சர் ஸ்டிபன் ஸ்மித் பாதுகாப்பு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு சுயேட்சை உறுப்பினர் களின் ஆதரவுடன் ஆட்சியமைத்துள்ள பிரதமர் அந்த உறுப்பினர்களின் சம்மதத்துடனேயே புதிய அமைச்சரவை நியமனங்களைச் செய்துள்ளதாக அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# காஷ்மீரில் மீண்டும் கலவரம் வெடிப்பு தீக்கிரையாகும் அரச அலுவலகங்கள்

## கட்டுப்படுத்த ஊடரங்கு அமுலில்



(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் மீண்டும் கலவரம் வெடித்த து அரசு அலுவலகங்களுக்கு வன்முறை கும்பல் தீ வைத்தது. இதனால் பதற்றம் நிலவு கிறது.

காஷ்மீரில் பிரிவினைவாத ஆதரவு கும்பல்கள் கடந்த 3 மாதங்களாக வன் முறையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் நிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து வருகிறது. கலவரத்தை ஒடுக்கும் பணியில் இராணுவமும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீநகர் உட்பட மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு கலவரம் பரவி வருவதால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கட்டுப் படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும் கலவரக் கும்பல்கள் அமைதியாவதும் மீண்டும் வன் முறையில் ஈடுபடுவதும் தொடர்கிறது. இந்த நிலையில் ரம்ழான் பண்டிகைக்காக நேற்று முன்தினம் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டு இருந்தது. ஸ்ரீநகரில் உள்ள ஹஸ்ரத் பால் மசூதியில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு தொழுகை நடத்தினர்.

தொழுகைக்குப் பின் மக்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது மசூதிக்கு வெளியே பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது ஒரு கும்பல் திடீரென தாக்குதல் நடத்தியது.

பொலிஸ் வாகனங்களுக்கும் தீவைத்தது. இதனால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. கலவரத்தை தடுக்கவும் கும்பலை விரட்டவும் பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

சிதறி ஓடிய கூட்டம் அருகில் இருந்த அரசு அலுவலகங்களுக்கு தீ வைத்தது. இதுபற்றி பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், ஹூரியத் மாநாட்டு கட்சியின் பிரிவினைவாத தலைவர் சையத் அலிஷ கிலானியின் ஆதரவாளர்களும் மற்றொரு பிரிவைச் சேர்ந்தவர்களும்தான் பொலிஸார் மீதும் வாகனங்கள் மீதும் தாக்குதல் நடத்தினர் என்றார்.

இதற்கிடையே ஹூரியத் மாநாட்டு கட்சியின் மிதவாத பிரிவு தலைவர் மிர்வைஸ் உமர் பரூக் தலைமையில் ஈத்காவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொழுகையில் 2 இலட்சம் பேர் கலந்துகொண்டனர். தொழுகைக்குப் பிறகு பேசிய அவர், பொலிஸார் சமீபத்தில் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலர் பலியான சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்க, லால் சவுக்கில் அரை மணிநேரம் தர்ணா நடத்த அனைவரும் வரவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.


அதைத் தொடர்ந்து தொழுகையில் கலந்து கொண்டவர்கள் லால் சவுத் சென்று தர்ணாவில் ஈடுபட்டனர்.

காஷ்மீர் மாநிலத்தில் கலவரம் தொடர்வது மத்திய அரசுக்கு கவலை அளித்துள்ளது. (ஏ-2)

# பாரதச் செய்திகள்

# தி.மு.க. ஆட்சியில் இருந்து தமிழக மக்களை மீட்பேன்

## விஜயகாந்த் சூளுரை



(சென்னை)

எந்தக் காரணத்தைக் கொண்டும் இன்றைய தி.மு.க. ஆட்சி மீண்டும் வராமல் தோற்கடித்து, தமிழக மக்களை மீட்பதே தே.மு.தி.க.வின் புனிதப் பணியாகும் என்று அக்கட்சியின் நிறுவுனர் விஜயகாந்த் கூறியுள்ளார். கட்சியின் ஆறாம் ஆண்டு தொடக்க விழா இந்தமாதம் 14ஆம் திகதி வருவதை முன்னிட்டு அவர் வெளியிட்ட அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கட்சி தொடங்கி சில மாதங்களில் நடந்த சட்டடப் பேரவைத் தேர்தலில் 8.5 சதவீத வாக்குகளும்,அடுத்து நடந்த மக்களவைத் தேர்தலில் 11 சதவீத வாக்குகளும் தே.மு.தி.க.வுக்கு கிடைத்தன.

தனித்துப் போட்டியிடும் மக்கள் தொடர்ந்து ஆதரிப்பதற்குக் காரணம், நாம்யாருக்கும் இடையூறு செய்வதில்லை என்பதுதான். வணிக நிறுவனங்களை மிரட்டிப் பணம் வசூலிப்பதில்லை. இளைஞர்கள் அதிகம் உள்ள கட்சியாக இருந்தாலும் வன்முறைகளில் ஈடுபடுவது இல்லை. உழைப்பினால் சம்பாதிக்கும் பணத்திலேயே கட்சி நிகழ்ச்சிகளை நடத்துகிறோம். வறுமை, வேலையில்லா திண்டாட்டம், விலைவாசி உயர்வு, மின்வெட்டு, சட்டம், ஒழுங்கு சீர்குலைவு ஆகியவற்றால் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழக அரசியலில் சில குடும்பங்கள் குபேரர்களாகவும், கோடிக்கணக்கான குடும்பங்கள் வறுமையிலும் உழன்று வருகின்றன.

தி.மு.க. அரசின் புள்ளி விபரத்தின்படி தமிழகத்தில் 52 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் உள்ளன. இவற்றில் பரம ஏழைகளாக இருப்போர் 19இலட்சம் குடும்பத்தினர்.

இந்தச் சூழ்நிலையில் வரும் தேர்தலிலாவது ஆட்சி மாறாதா என மக்கள் எதிர்பார்க்கிறார்கள். தே.மு.தி.க.விடம் அவர்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள். அதற்கேற்ப நாம் ஆற்ற வேண்டிய பணி மகத்தானது. வரும் சட்டப் பேரவைத் தேர்தலில் புதிய வரலாறு படைக்கும் வகையில் நம் உழைப்பு அமைய வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் தி.மு.க. ஆட்சி மீண்டும் வராமல் அதைத் தோற்கடித்து, தமிழ் நாட்டு மக்களை மீட்பதே நம்முடைய புனிதப் பணியாகும். இன்றைய முதல்வர் கருணாநிதியின் கனவு பலிக்காது.

மாற்றார்கள் நம்மீது அவதூறு பரப்புவார்கள். வீண்பழி சுமத்துவார்கள், நமக்குள்ளேயே பேதத்தை உருவாக்குவார்கள். ஆசை காட்டுவார்கள். அச்சமூட்டுவார்கள். அவை அனைத்தையும் துச்சமென முறியடித்து தேர்தலில் தே.மு.தி.க.வை வெற்றி பெறச் செய்வது நம் கடமையாகும் என்று கூறியுள்ளார் விஜயகாந்த். (எ-2)

# கைத்தொலைபேசியில் பரீட்சை எழுதும் புதிய முறை

## பெங்களூர் கல்லூரியில் அறிமுகம்

(பெங்களூர்)

கையடக்கத் தொலைபேசியில் மாணவர்கள் பரீட்சை எழுதும் புதிய முறையை பெங்களூரைச் சேர்ந்த பிரபல கல்லூரி அறிமுகப் படுத்தியுள்ளது. எலகங்காவில், சேஷாத்ரிபுரம் பர்ஸ்ட் கிரேடு கல்லூரி இயங்கிவருகிறது. இதில் 3ஆயிரம் மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்தக்கல்லூரி மாணவர்கள் கையடக்கத் தொலைபேசியில் பரீட்சை எழுதும் புதிய முறை அறிமுகப்படுத்தியுள்ளது. இது தவிர வகுப்பறையில் மாணவர்களின் வருகை, இதில் பதிவு செய்யப்படுகிறது

இதுகுறித்து கல்லூரி முதல்வர் பிரகாஷ் கூறுகையில், பரீட்சை எழுதும் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும், சாதாரண வகை புதிய கையடக்கத்தொலைபேசி ஒன்று வழங்கப்படும். அதில் 120 கொள்குறி வகை வினா - விடை கொடுக்கப்பட்டிருக்கும். ஒரு கேள்விக்கு 4 பதில்கள் தரப்பட்டிருக்கும். அதில் சரியான பதிலை மாணவர்கள் தெரிவு செய்து சப்மிட் என கொடுக்கப்பட்டிருக்கும் பகுதியில் பதிவு செய்தால் போதுமானது.

இந்தப் பரீட்சை 3 மணிநேரம் நடக்கும். மாணவர்கள் பதிவுசெய்த விடைகள் இதிலிருந்து கம்ப்யூட்ரில் டவுண்லோடு செய்யப்படும். இதில் மாணவர்கள் எழுதிய சரியான பதில்களை கம்ப்யூட்ரே கணக்கிட்டு, புள்ளி போட்டு விடும். இந்தப் புதிய முறையால், விடைத்தாள் திருத்துவதில் நடைபெறும் முறைகேடுகள் நடக்க வாய்ப்பு இல்லை. பரீட்சை முடிவுகள் வெளியிடுவதிலும் கால தாமதம் ஏற்படாது.

இதேபோன்று, மாணவர்களின் வருகைப் பதிவேடும் கையடக்கத் தொலைபேசி மூலம் பதிவுசெய்யப்படும். வகுப்புக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு இது ஒன்று வழங்கப்படும். அதில் வகுப்பில் உள்ள மாணவர்களின் பெயர்ப்பட்டியல் இருக்கும். வகுப்பில் ஆசிரியர் நுழைந்ததும் வருகை தந்துள்ள மாணவர்களின் பெயர்களை டிக் செய்து 15 நிமிடங்களுக்குள் கல்லூரியின் சர்வருக்கு எஸ்.எம்.எஸ் அனுப்பிவிடுவர். 15 நிமிடங்களுக்கு பின்வரும் மாணவர்களுக்கு வருகைப் பதிவேட்டில் பதிவு செய்யமுடியாது. இதனால் மாணவர்கள் குறித்த நேரத்தில் கல்லூரிக்கு வந்துவிடுவர். மேலும் , தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மேல் கல்லூரிக்கு வராத மாணவர்கள் குறித்து கல்லூரியின் சர்வர்கம்ப்யூட்ரிலிருந்து அவர்களது பெற்றோரின் கையடக்கத் தொலைபேசிக்கு எஸ்.எம்.எஸ். பறந்து விடும்.

கடந்த ஆண்டுமுதல் இந்த புதிய முறை சோதனை அடிப்படையில் சில வகுப்புகளுக்கு மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. ஆகவே இந்த இரண்டு புதிய முறைகளையும் எங்களது கல்லூரியின் அனைத்து வகுப்புகளுக்கும் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளோம் இவ்வாறு பிரகாஷ் கூறினார். (ஸ்ரீ-2)

# திரைஇசைப் பின்னணிப் பாடகி ஸ்வர்ணலதா காலமானார்



திரை இசை பின்னணிப் பாடகி ஸ்வர்ணலதா நேற்று காலமானார். சென்னை அடையாறிலுள்ள பிரபல தனியார் மருத்துவமனையில் நுரையீரல் பாதிப்பு காரணமாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பாடகி ஸ்வர்ணலதா, சிகிச்சை பலனின்றி நேற்றுக்காலை 11 மணி அளவில் காலமானார். இவருக்கு வயது 37.

பிரபல இசையமைப்பாளர்களான இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான் உள்ளிட்ட பெரும்பாலான இசையமைப்பாளர்களின் இசையிலும் இவர் பாடியிருக்கிறார். கேரள மாநிலம் பாலக்காடு இவருடைய சொந்த ஊர். 1990 இல் தமிழில் வெளியான சத்ரியன், 95 இல் வெளியான ராணி ரத்னப்ரபா என்ற தெலுங்குப் படம், 95இல் ஹிந்தியில் வெளியான ரங்கீலா படங்களின் மூலமாக, தன் வசீகரக்குரலால் பெரும்பாலான ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர்.

90 ஆம் ஆண்டு வெளியான கேப்டன் பிரபாகரன் படத்தில் இவர் பாடிய 'ஆட்டமா... தேரோட்டமா...' சின்னத் தம்பி படத் தில் இடம் பெற்ற 'போவோமா ஊர் கோலம்...' ஆகிய பாடல்கள் இவரை புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றது. தமிழக அரசின் சிறந்த பின்னணி பாடகிக்கான விருது, மற்றும் தேசிய விருதும் (கருத்தம்மா படத்தில் பாடிய போறாளே பொன்னுத்தாயி பாடலுக்காக) பெற்றுள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, பஞ்சாபி, கன்னடம் எனப் பல்வேறு மொழிகளில் 500க்கும் அதிகமான பாடல்களைப் பாடியிருக்கிறார். (ஏ)



மிஹின் லங்கா நிறுவனத்தின் புதிய கிளை நேற்று ஸ்ரான்லி வீதியில் திறந்து வைக்கப்பட்டது.இந்நிகழ்வில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி,பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதை முதல் படத்திலும் அமைச்சர்கள் இணைந்து நாடாவெட்டி திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் அமைச்சர் பௌசி,மிஹின் லங்காவின் தலைவர் கபில சந்திரசேன ஆகியோர் உரையாற்றுவதை அடுத்தடுத்த படங்களிலும் காணலாம்.

(படங்கள்:-கரன்)

# 3 வருட காலப்பகுதியில் கிழக்கில் 95 பேர் காணாமல் போயுள்ளனர்

## மட்டு எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணம் அரசாங்கத்தின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு மூன்று வருடங்கள் கடந்து விட்ட நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் பெண்கள் உட்பட 95 பேர் காணாமல் போயிருப்பதாக மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தெரிவித்துள்ளார்.

காணாமல் போயுள்ளவர்களின் உறவினர்கள் தங்களிடம் பதிவு செய்துள்ள விவரங்களின் படி பாதுகாப்புத் தரப்பு மற்றும் தமிழ் ஆயுதக் குழுக்கள் மீதே இது தொடர் பான சந்தேகங்களை அவர்கள் தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை சுமார் 95 ஆக இருந்தாலும் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக் கலாம் என தாம் கருதுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்றார்.

தமது கட்சியாகிய தமிழத் தேசிய கூட்டமைப்பு இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியுடன் நேரடி பேச்சுக்களில் ஈடுபடவிருப்பதாகவும் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

55 வயதாக கொக்குவில் கிராமத்தைச் சேர்ந்த வீரக்குட்டி மாரி முத்து தனது மகனாகிய புஷ்பதேவா 20 மாதங்களுக்கு முன்னர் வீட்டுக்கு வந்த சிவிலுடையினரால் அழைத்து கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினராகிய தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த பிரகாசம் சகாயமணி என்பவரும் காணாமல் போயுள்ளதாக அவரது மனைவி ஜோஸப்பின் மேரி தெரிவித்துள்ளார்.

தனது கணவன் காணாமல் போவதற்கு முந்திய தினம் இரவு தொலைபேசி மூலம் அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சட்டம் ஒழுங்கு மற்றும் சிவிலியன்களின் பொதுவான பாதுகாப்புக்கு பொலிஸாரும் பாதுகாப்புப் படையினருமே பொறுப்பு கூற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் எனச் சுட்டிக்காட்டினார்.

(ஸ்ரீ-2)

## சம்பூர் அனல் மின் நிலையத்திற்கு 25 வருடங்கள் வரிச்சலுகை

திருமலை மாவட்டம் சம்பூரில் இந்திய அரசின் உதவியுடன் அமைக்கப்படும் அனல் மின் நிலையத்திற்கு 25 வருடங்கள் வரிச்சலுகை அளிக்கப்படும் என இலங்கை அரசு இந்தியாவுக்கு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சீனாவுடன் வலுவான நட்பை பேணிவரும் இலங்கை இந்தியாவை ஏமாற்ற சில சலுகைகளை அறிவித்து வருகின்றது. அதன் தொடர்ச்சியாக சம்பூர் அனல் மின் நிலையத்திற்கு வரிச்சலுகை அளிக்கப்படும் என[illegible]து தெரிவித்துள்ளது.

அபிவிருத்தி திட்டத்தின் அடிப்படையில் இந்த வரிசலுகை வழங்கப்படுவதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கடந்த 6ஆம் திகதி வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

250 மெகாவற் சக்தி கொண்ட இரண்டு அனல் மின் நிலையங்கள் எதிர்வரும் ஐந்து வருடங்களில் இயங்க ஆரம்பிக்கும் என அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# எமது பிள்ளைகளின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது! அவர்களை பிணையிலாவது விடுதலை செய்யுங்கள்

## கைதிகளின் பெற்றோர் ஜனாதிபதிக்கு கடிதம்

இலங்கையில் பல்வேறு சிறைச்சாலைகளிலும் உள்ள தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை விடுவிக்கக் கோரி ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும் அண்மையில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர் சந்தித்து தங்கள் பிள்ளைகளின் விடுதலை தொடர்பாக பேசியிருந்தார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேதகு ஜனாதிபதி அவர்களே!

கடந்த காலத்தில் நாட்டில் நிலவிய யுத்த சூழ்நிலையின் போது அதன் பிற்பாடும் பல்வேறு காரணங்களுக்காக பயங்கரவாதம் மற்றும் அவசர கால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இலங்கையின் பல்வேறு சிறைச்சாலைகளிலும் எமது பிள்ளைகள் மிக நீண்ட காலமாய் துயரங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை பிணையிலோ அல்லது பொது மன்னிப் பிலோ விடுதலை செய்து எமது வாழ்வின் வசந்தம் மலர செய்யுங்கள்.

தாங்கள் வடக்கின் வசந்தம் கிழக்கின் உதயம் என பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறீர்கள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற யுத்தத்தில் நாம் பாதிக்கப்பட்டு எமது அனைத்தையும் இழந்து போய் உள்ள நிலையிலும் கூட எமக்கு நல்ல எதிர்காலம் உதயமாகும் என்று தங்களின் நல்லெண்ண நடவடிக்கை ஊடாக எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

நாங்கள் உங்களில் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கின்றோம். யுத்தம் முடிந்து விட்டது. நிம்மதியாய் இருப்போம் என்று நினைக்கும் போது எமது பிள்ளைகள் சிறையில் நீண்ட காலமாய் எவ்வித முடிபு இன்றி ஒன்று தொடக்கம் 18 வருடங்களாய் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை நினைக்கும் போது நாம் இனி உயிர் வாழ்வது ஏன்? என்ற விரக்தியுடனும் எமது பிள்ளைகளின் எதிர் காலத்தை நினைத்து உயிர் வாழ்கின்றோம் நாளாந்தம் கண்ணீரும் கவலைகளுமே எமக்கு சொந்தமாகி விட்டன. உடைமைகளை இழந்த நாம் எமது உறவுகளையும் இழந்து விடுவோமா? என எண்ணத் தோன்றுகின்றது.

நிவாரணக்கிராமங்களிலும் மர நிழல்களிலும் வீதியோரங்களிலும் நின்று எமது பிள்ளைகளுக்கு எப்போது விடுதலை கிடைக்கும் என எதிர்பார்த்து காத்து இருக்கின்றோம். பிள்ளைகளை காணாது பெற்றோரும் பெற்றோரை பிரிந்த பிள்ளைகளும் கணவனை காணாது மனைவியும் யாருடைய அரவணைப்பு மின்றி அநாதைபோல் அன்றாட செலவுகளையே சமாளிக்க முடியாமல் உழைத்துத்தர யாரும் இல்லாமல் பிச்சை எடுக்கும் நிலையிலேயே குடும்பம் நடத்துகின்றோம்.

சிறையில் வாடும் தாய் ,தந்தையரின் அரவணைப்பின்றி அவர்களின் பாசத்திற்காக ஏங்கும் எம் குழந்தைகளின் ஏக்கங்களை புரிந்துகொள்ளுங்கள்.சிறு வயதில் ஒரு குழந்தைக்கு தாய் தந்தையரின் அன்பும் அரவணைப்பும் எவ்வளவு முக்கியம் என்பது தங்களுக்கும் புரியும். வயதான பெற்றோரும் அவர்களின் கடைசிக் காலத்தில் ஆறுதலுக்கும் அவர்களை பராமரிக்கக்கூட யாரும் இல்லாமல் மன அழுத்தங்களுடன் எம்மிடத்தில் வாழ்கின்றனர்.

எங்கள் குடும்பங்களின் எதிர்காலம் எமது பிள்ளைகளின் கையில் தங்கியிருக்கையில் எம் பிள்ளைகளின் எதிர்காலமே கேள்விக்குறியாகியுள்ளது.

இந்நிலையில் எங்கள் குடும்பங்களின் எதிர்காலம் என்னவாவது?எங்கள் நிலைமையை எண்ணிப்பாருங்கள்.

கடந்த ஜனாதிபதித்தேர்தல் காலத்தில் தமிழ் கைதிகளில் குற்றமற்றவர்களை உடன் விடுதலை செய்யவும் வழக்குத்தாக்கல் செய்யப்படவேண்டியவர்களை பிணையில் விடுவிக் கவும் நடவடிக்கை சட்டமா அதிபர் தெரிவித்ததாக செய்தி வெளிவந்துள்ளது.

ஆனால் தற்போது தேர்தல் முடிந்து பல மாதங்களாகியும் யுத்தம் முடிந்து ஒரு வருடத்திற்கு மோலாகியும் எமது பிள்ளை களுக்கு விடுதலை எதுவும் வழங்கப்படவில்லை.

அவர்களுக்கு பிணையும் கிடைக்கவில்லை. கைதிகளின் பெற்றோர்களாகிய நாம் மிகுந்த வருத்தத்துடனும் வேதனையுடனும் விரக்தியான மன நிலையிலேயே இந்த கடிதத்தை அனுப்பி வைக்கின்றோம். இதற்கு முன்பும் பல கடிதங்களை தங்களுக்கு அனுப்பி இருந்தோம். தாங்கள் நல்ல முடிவை தெரிவிப்பீர்கள் என்ற எண்ணத்தில் மீண்டும் இக் கடிதத்தை எழுதுகின்றோம். தயவு செய்து எமது பிள்ளைகளை பொது மன்னிப்பில் அல்லது பிணையிலாவது விடுதலை செய்வதற்கு ஆவன செய்யுங்கள்.

அத்துடன் இக்கடிதத்தின் இணைப்பிரதிகள் நீதியமைச்சு ,சிறைச்சாலைகள் அமைச்சு , சட்டமா அதிபர் ஆகியோருக்கும் அனுப்பப் பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

## அம்பாறையில் கடலில் மூழ்கி பாடசாலை மாணவன் மரணம்

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேசத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் நேற்று நண்பகல் 12 மணியளவில் கடலில் மூழ்கி மரணமாகியுள்ளார்.

கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவரான 17 வயதுடைய துரைரெட்ணம் அனோஜன் என்பவரே இவ்வாறு மரணமானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் ஆசிரியர் துரைரெட்ணம் மற்றும் கல்முனை வைத்தியசாலை வைத்திய அதிகாரி குமுதினி ஆகியோரின் மகனாவார் உயர்தர பிரத்தியேக வகுப்பிற்குச் சென்றவர் அவருடைய சில நண்பர்களுடன் நேற்று மதியம் கடலுக்கு நீராடச் சென்றவேளையிலேயே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. இவரது சடலம் இன்னமும் கண்டு பிடிக்கவில்லை. (ஸ்ரீ-2)

தானும் கட்டளையிடமாட்டான். பிறரின் கட்டளைக்கும் கீழ்ப்படியமாட்டான். அவன்தான் ஒன்றுக்கும் உதவாதவன். — ஜேர்மன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# உங்கள் கண்டனங்களை குப்பையில் கொட்டுங்கள்

இலங்கையின் அரசியலமைப்பின் 18 – வது திருத்தச் சட்டத்தை அமெரிக்கா கண்டித்துள்ளது. அமெரிக்காவின் இந்த கண்டனம் என்ன செய்யும் என்றால் எதுவுமே இல்லை என்பதே அதற்கான பதிலாக அமையும்.

கண்டனங்கள், ஆழ்ந்த அனுதாபங்கள், அதிர்ச்சிகள் அனைத்தும் சம்பிரதாயமானவை. இவற்றால் எதுவும் ஆகப் போவதில்லை. அதே நேரம் பாதிக்கப்படும் மக்களுக்கு இத்தகைய கண்டனங்கள் எத்தகைய விமோசனங்களையும் பெற்றுத்தரப் போவதில்லை என்பதும் தெரிந்த விடயமே.

அதிலும் இலங்கை தொடர்பில் உலக நாடுகள் விடுத்த கண்டனங்கள், கவலைகள், எச்சரிக்கைகள் அனைத்தும் செல்லுபடியற்றவையாகிப் போனதே உண்மை.

சில இடங்களில் கண்டனங்களை கேலிக்குரியனவையாக இலங்கை அரசு பரிகசித்ததும் உண்டு.

அதில் ஐ.நா செயலாளர் பான் கீ மூனின் இலங்கை தொடர்பான கண்டன அறிக்கைகள் இலங்கையில் பரிகசிக்கப்பட்டன.

ஐ.நா செயலாளர் என்பதற்கான அடிப்படைக் கௌரவங்கள் கூட அவருக்கு வழங்கப்படாமல் அவரைத் தனிப்பட்ட முறையில் அமைச்சர் விமல் வீரவன்ச விமர்சித்திருந்தார்.

ஆக, இலங்கை அரசைக் கண்டிக்க முற்பட்டு மூக்குடைந்துபோய் மௌனத்தைக் கடைப்பிடிக்கும் அளவிலேயே ஐ.நா செயலாளர் பான் கீ மூனின் நிலை உள்ளது.

சிறிய நாடான இலங்கையிடமே மூக்குடையும் ஐ.நா. சபை தமிழ் மக்களின் விடயத்தில் ஏதேனும் செய்யுமென எதிர்பார்ப்பது மடமைத்தனம்.

இதற்கு மேலாக வன்னியில் இடம்பெற்ற யுத்தம், தமிழர்கள் அழிப்பு, சர்வதேச தொண்டு நிறுவனங்களை வன்னியிலிருந்தும், நாட்டிலிருந்தும் வெளியேற்றியமை, மூன்று இலட்சம் தமிழ் மக்களை முட்கம்பி வேலிக்குள் முடக்கியமை என்ற நிகழ்ச்சிகளின் போதெல்லாம் உலக நாடுகள், சர்வதேச பொது அமைப்புக்கள் தமது கண்டனத்தை தெரிவித்தன.

"ரோசம் கெட்டவன் ராசாவிலும் பெரியவன்" என்ற கொள்கையில் இருக்கும் இலங்கை அரசு இந்தக் கண்டனங்களை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு தன்பாட்டில் செயற்பட,

கண்டித்த நாடுகள் வேலிக்குள் கிடந்து கூவும் செம்பகத்தின் பரிதாப நிலைக்கு ஆளாகின.

இப்போதும் அந்தக் கண்டனக் கலாசாரத்தையே உலக நாடுகள் தொடர்வது சிறிய நாடான இலங்கையிடம் தொடர்ந்தும் அவமானப்படுவதற்கேயன்றி வேறு எதற்குமானதல்ல. உலகமயமாதல் என்ற சூழமைவு இலங்கை போன்ற நாடுகளுக்கு வாய்ப்பாகிவிட்டதெனும் உண்மைக்குள்,

அந்தச் சந்தர்ப்பத்தை இலங்கை அரசு கனகச்சிதமாக பயன்படுத்தியுள்ள தென்ற மெய்ம்மையையும் நாம் ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

எனவே இலங்கை தொடர்பில் ஏதேனும் நடவடிக்கைகளை உலக நாடுகள் எடுக்க முற்படுவதாக இருந்தால் அதற்கு கண்டனங்கள் வழியாக மாட்டா.

மாறாக கண்டனங்களை குப்பையில் எறிந்துவிட்டு மாற்று வழிபற்றி சிந்திக்க வேண்டும். அப்போதுதான் முன்னைய கண்டனங்களும் அர்த்தமுடையவையாக உணரப்படும்.

# மிக விலை உயர்ந்த புத்தகம் விற்பனைக்கு

(அமெரிக்கா)

உலகத்தின் மிகவிலை உயர்ந்த அரிய புத்தகமான ஜான் ஜேம்ஸ் அடுபோன்ஸின் பேர்ட்ஸ் ஆஃப் அமெரிக்கப் புத்தகம் சோதிபைஸ் ஏலக்கடையில் விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

19 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட இந்தப் புத்தகத்தின் முழுமையான வடிவங்களில் 119 பிரதிகள் மட்டுமே தற்போது இருப்பதாக அறிய வந்துள்ளது. அவற்றில் 108 புத்தகங்கள் நூலகம் மற்றம் அருங்காட்சியகங்களில் உள்ளன.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் இந்தப் புத்தகத்தின் தனிப் பிரதி ஒன்று 8.8 மில்லியன் டாலர்களுக்ககு விற்பனையாகியது.

டிசம்பர் மாதம் விற்பனை செய்யப்படும் பிரதி மறைந்த லார்ட் ஹெஸ்கத் அவர்களின் சேகரிப்பில் இருந்து வருகிறது.

இந்தப் புத்தகத்தில் 500 பறவை இனங்களின் சுமார் 1000 பொருள் உயர ஓவியங்கள் உள்ளன.

இந்த ஓவியங்கள் மற்றும் ஆராய்ச்சியை முடிக்கவென உயிர் ஓவியரான ஜான் ஜேம்ஸ் அடுபோனுக்கு சுமார் 12 ஆண்டு காலம் பிடித்தது.

அமெரிக்கா முழுவதும் பயணித்து பறவைகளை சுட்டு பின்னர் அவற்றை கம்பியில் கட்டித் தொங்கவிட்டு அவற்றை இவர் வரைந்துள்ளார். அதன் பின்னர் பிரிட்டனுக்குச் சென்ற அவர் புத்தகங்களை பிரசுரித்து அவற்றை செல்வந்தர்களிடம் விற்பனை செய்தார். (ச)

# ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் 1312 சிறைக் கைதிகள் விடுதலை

(கொழும்பு)

சிறைக் கைதிகளின் நலன்புரி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளிலுள்ளஆயிரத்து 312 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

70 வயதைத் தாண்டியவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் வெலிகடைச் சிறையில் தண்டனை அனுபவித்து வந்த 4 கைதிகள் அவ்வாறு விடுதலை செய்யப்பட்டதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் வீ.ஆர்.டி சில்வா தெரிவித்துள்ளார்.

வெலிகடை, அனுராதபுரம் உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் தண்டனை அனுபவித்து வந்த கைதிகள் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலை செய்யப்பட்டவர்களில் 37 பெண் கைதிகளும் அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அபராதப் பணத்தை செலுத்த முடியாத பலர் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ச)

# தேர் செல்ல வழி அமைத்தவர் கூரை உடைந்து விழுந்து மரணம்

## கொட்டகலையில் சம்பவம்

கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய தேர்ப் பவனியின்போது வீதியின் குறுக்கேயிருந்த தொலைபேசிக் கம்பியை கூரையொன்றின்மீதேறி உயர்த்துவதற்கு எத்தனித்த நபரொருவர் கூரை உடைந்ததில் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் கொட்டகலை நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

ட்ரைட்டன் கே.ஓ.தோட்டத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தையான 36 வயதுடைய நடராஜ் சுதாகர் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

தான் பணியாற்றிய வர்த்தக நிலையமொன்றின் கூரை மீதேறியபோதே அவர் கீழே விழுந்தார்.

கூரை உடைந்து விழுந்ததில் தலையில் பலமான காயமேற்பட்ட நிலையில் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் கொட்டகலை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# இலங்கையில் இந்த வருட இறுதிக்குள் 3 இலட்சம் பேர் தொழிலை இழப்பர்

## மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் சிறிலங்காவில் 3 இலட்சம் தொழிலாளர்கள் தமது தொழில்களை இழப்பார்கள் என மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டுள்ளது

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

2009-2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொழிலாளர்களுக்கான ஈ.பி.எஃப் கொடுப்பனவுகள் பெருமளவில் குறைவடைந்துள்ளன. அதன் எண்ணிக்கை 3 இலட்சம் ஆகும்.

இதனை மறுவளமாக கூறுவதானால் அரச மற்றும் தனியார் துறைகளில் 3 இலட்சம் பேர் தொழில்களை இழக்கின்றனர்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வருவதாகவும் புதிய தொழிற்சாலைகள் திறக்கப்படுவதாகவும் அரசு தெரிவித்து வருகின்ற போதும் எவையும் நடைபெறவில்லை என்பதே உண்மையானது.

இலங்கைப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படுவதற்குரிய அறிகுறிகள் தென்படவில்லை. இலங்கையிலுள்ள 800 புடைவை உற்பத்தி நிலையங்களில் 200 நிலை யங்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# வடமாகாணத்தில் மேலும் 4 கிராமங்களுக்கு மின்சாரம்

வடமாகாணத்தில் மேலும் 4 கிராமங்களுக்கு இம்மாத இறுதியில் மின்சார விநியோகம் வழங்கப்படவுள்ளது. இதற்கென 70 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய், வற்றாப்பளை, கனகராயன் குளம் வடக்கு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் பளை ஆகிய பிரதேசங்களுக்கு மின்சார விநியோகம் வழங்கப்படவிருக்கின்றது.

இதற்கென அதிவலுகொண்ட மின் விநியோக இணைப்புக்கள் இரண்டு ஏற்படுத்தப்படுகின்றது. இக்கிராமங்கள் அதற்கு முன்னர் ஒருபோதும் மின்சார வசதியைப் பெற்றிருக்காத கிராமங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் மின்சார அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக செயற்றிட்டத்திற்கு பொறுப்பான பணிப்பாளர் பிறேசின் முத்துக்கூடாராச்சி தெரிவித்துள்ளார். (எ-7)

# சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு



எந்த கணமும் மாறுதல்களை ஏற்க, நீ தயாராக இருக்காதவரை , உன்னால் ஒருபோதும் உண்மையைக் காண முடியாது. ஆனால் நிதானமாகவும் , உறுதியாகவும் இருந்து உண்மையைத் தேடுவதில் நீ நாட்டம் கொள்ள வேண்டும்.

கொடுப்பதற்கு என்னிடம் பணம் இல்லை, கற்பதற்கான அறிவு என்னிடம் இல்லை. யோகம் செய்ய நேரம் இல்லை. இறைவா! எனது உடல் , மனம் அனைத்தையும் உன்னிடம் நான் ஒப்படைத்து விட்டேன்.

இந்த பிரபஞ்சம் நாம் அனுபவிப்பதற்காகவே உள்ளது. ஆயினும் ஒன்றையும் வேண்டாதே. ஆசைப்படுவது நம்மை பிச்சைக்காரன் ஆக்குகிறது. நாம் அரசிளங்குமாரர்கள் ,பிச்சைக்காரர்கள் அல்ல.

# மூன்றாவது ஐரோப்பிய நாட்டில் கால் பதிக்கும் மனிதநேய நடைப்பயணம்

(கொழும்பு)

பெல்ஜியம் ஐரோப்பிய ஒன்றியத்தை நோக்கி, சுவிஸ் ஜெனீவா ஐ.நா. சபை முன்னால் ஆரம்பிக்கப்பட்ட மனித நேய நடைப் பயணம் மூன்றாவது ஐரோப்பிய நாட்டில் கால் பதிக்கவுள்ளது.

சுவிஸ் நாட்டைக் கடந்து, பிரான்ஸ் நாட்டின் கிழக்குப் பகுதியினூடாக தொடர்ந்து வருகின்ற நடைப்பயணம் தற்போது ஜெர்மன் நாட்டை அண்மித்துள்ளது.

கடந்த 5ஆம் திகதி பிற்பகலில் இருந்து பிரான்ஸ் நாட்டினூடாக நடைப்பயணம் தொடரப்பட்டது.

பல குக்கிராமங்கள் வழியாக மிகவும் உற்சாகத்துடன் தொடரப்பட்ட நடைப் பயணத்தின்போது, பிரெஞ்சு மக்கள் நடைப்பயணத்திற்கான காரணங்களைக் கேட்டறிந்து கோரிக்கைகள் நிறைவேற தமது வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், மனித நேய நடைப்பயணத்தை தொடர்ந்து வரும் ஜெகன், திருமதி.தேவகி குமார், வினோத் ஆகியோருக்கு மனப்பூர்வமான நல்வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தை நோக்கி தமிழ் மக்களிற்கு நீதிகேட்டு மானிடநேய நடைப் பயணம் மேற்கொண்டுள்ள ஜெகன் (வயது 62) அவுஸ்திரேலியா, திருமதி தேவகிகுமார் (வயது 36) சுவிஸ், வினோத் (வயது 48) பிரான்ஸ் ஆகிய மூன்று ஈழ உணர்வாளர்கள் 16 ஆவது நாளாக தமது நடைப்பயணத்தைத் தொடர்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு பல்வேறுபட்ட ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் தமிழ் மக்கள்வருகை தந்து தமது நல் ஆதரவை வழங்கிவருதுடன், தாய்த் தமிழக உறவுகள் தொலைபேசி மூலம் உரையாடி அளவு கடந்த உற்சாகம் வழங்கி வருகின்றனர்.

◆ இலங்கை அரசு மீது ஐ.நா. சுயாதீன போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ள வேண்டும். அதற்கு ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

◆ சிறைகளில் தவிக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும்.

◆ மனித உரிமைகள் மதிக்கப்படும்வரை இலங்கை அரசை அனைத்து நாடுகளும் புறக்கணிக்கவேண்டும்.

◆ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இம்மனித நேய நடைப்பயணம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த தொடர்ச்சியான மனிதநேய நடைப்பயணத்திற்கு ஐரோப்பா வாழ் அனைத்து தமிழ்மக்களும் தொடர்ச்சியான ஆதரவினை வழங்குமாறு அழைப்பு விடுத்துள்ளனர். (ஸ்ரீ-2)

## இ.போ.ச பயணிகளுக்கான காப்புறுதித் திட்டம்

இலங்கைப் போக்குவரத்து சபை பஸ்களிலும் மற்றும் ரயில்களிலும் பயணிக்கும் பயணிகளுக்கு காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அமைச்சர் குமார வெல்கமவின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு வரப்பட்டதையடுத்து இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவேளை சேவையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டிருந்த N 9ரகரயில் எஞ்சினை மீண்டும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் குமார வெல்கம குறிப்பிட்டார்.

இதற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனமும் ஆதர் சி கிளார்க் நிறுவனமும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-7)

## எம்.வி.சன்.சீ கப்பல் விரைவில் விற்பனை

இலங்கைத் தமிழ் அகதிகள் 492 பேரை ஏற்றிக்கொண்டு கனடாவை கடந்த ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி சென்றடைந்த எம்.வி. சன்.சீ கப்பல் வெகுவிரைவில் விற்பனை செய்யப்படவுள்ளது. இக்கப்பலை வாங்க வருபவர்களிடம் இருந்து (Border Services Agency of Canada) விலை மனுக்களை கடந்த முத லாம் திகதி முதல் கோரியுள்ளது. இவ் விலை மனுக்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்று (Border Services Agency of Canada) அறிவித்துள்ளது. (ஸ்ரீ- 2)

## துருக்கியில் அரசியலமைப்பு மாற்றம் குறித்து சர்வஜன வாக்கெடுப்பு

(கொழும்பு)

துருக்கியில் அரசியலமைப்பை மாற்றியமைப்பது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு நடைபெற்று வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தராதரத்திற்கு ஏற்ப அரசியலமைப்பில் பல மாற்றங்களைச் செய்வதற்கு துருக்கிய அரசாங்கம் இணங்கியுள்ளது.

இதேவேளை இம் மாற்றங்கள் நீதிச் சேவை மற்றும் ஏனைய விடயங்களில் அரசாங்கத்திற்கு கூடிய கட்டுப்பாட்டு அதிகாரத்தை வழங்கும் என விமர்சகர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

28 வருட பழைமை வாய்ந்த இராணுவ அரசியலமைப்பு கட்டாயம் மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் இம் மாற்றத்தை ஆதரிப்போர் குறிப்பிடுகின்றனர்.

மேலும் அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் 26 திருத்தங்களைச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

## அமைச்சர் சென்ற உலங்குவானூர்தி அவசரமாகத் தரையிறக்கம்

(கொழும்பு)

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ பயணம் செய்த உலங்குவானூர்தியில் நேற்று ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அது அவசரமாக தரையிறக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மானிப்பாய் பகுதியில் இருந்து சென்ற உலங்கு வானூர்தியிலேயே இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளது.எனினும் அது அவசரமாக ஹசலக பகுதியில் உள்ள பொது விளையாட்டு மைதானத்தில் தரையிறக்கப்பட்டதால் அமைச்சர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

அதன் பின்னர் அவர் வேறு ஒரு உலங்குவானூர்தி மூலம் கொழும்புக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-2)

## தென்கிழக்காசியாவில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது-ஆய்வில் தகவல்

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் டெங்கு நோய் மோசமான பாதிப்பை இவ் வருடம் ஏற்படுத்தியிருக்கின்ற நிலையில் அட்லாந்தாவின் நோய் கட்டுப்பாட்டு நிலையத்தின் தகவலின் உதவியுடன் இந்திய சுகாதார அமைச்சு மேற்கொண்ட கணிப்பீட்டின் படி இலங்கை , தாய்லாந்து ,இந்தோனேசியா , மியன்மார் ஆகிய நாடுகள் டெங்கு நோயின் தாக்கத்தால் தற்போது அதிகளவுக்கு பாதிக்கப்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பால் பரவும் இந்த நோயினால் வருடாந்தம் 5 கோடி மக்கள் பாதிக்கப்படுவதாகவும் டெங்கு பரவும் நாடுகளில் 250 கோடி மக்கள் வாழ்வதாகவும் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் கடந்த ஜூலை 10 ஆம் திகதி வரை தென்கிழக்காசியாவில் இந்தோனேசியாவில் 86 ஆயிரத்து 65 பேரும் தாய்லாந்தில் 57 ஆயிரத்து 948 பேரும் இலங்கையில் 28 ஆயிரத்து 955 பேரும் மியன்மாரில் 12 ஆயிரம் பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பூட்டானில் இந் நோயால் பீடிக்கப்பட்டோரின் இறப்பு 2.28 சதவீதமாகவும் இலங்கையில் 0.99 சதவீதமாகவும் இந்தோனேசியாவில் 0.89 சதவீதமாகவும் மியன்மாரில் 0.75 சதவீதமாகவும் இந்தியாவில் 0.62 சதவீதமாகவுள்ளது.

(ஸ்ரீ-2)

## இலங்கையுடன் நட்பை புதுப்பிக்கும் நோர்வே

இலங்கை அரசு- தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோருக்கு இடையிலான சமாதானப் பேச்சுக்களின் போது மத்தியஸ்தராக செயற்பட்ட நோர்வே, யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கையுடன் நட்பைப் புதுப்பிக்க விருப்பம் தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கில் இடம்பெறவுள்ள ஐ.நா. கூட்டத்தொடரில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும் கலந்து கொள்கிறார்.

அங்கு அவருடன் நோர்வே நாட்டு உயர் மட்டக் குழு ஒன்று நல்லெண்ணச்சந்திப்பு ஒன்றை மேற்கொள்ள உள்ளது.

அந்நாட்டுப்பிரதமர், வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும்- இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவருமான எரிக் சொல்கெய்மும் இவ்வுயர் மட்டக்குழுவில் அங்கம் வகிக்கின்றார். (ஸ்ரீ-2)

## த எக்கொனமிஸ்ட் சஞ்சிகை சுங்க அதிகாரிகளால் பறிமுதல்

(கொழும்பு)

18ஆவது திருத்தச்சட்டத்தை கடுமையாக சாடி ஆசிரியர் தலையங்கம் ஒன்றை வரைந்திருந்த த எக்கொனமிஸ்ட் சஞ்சிகையை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் விமான நிலையத்தில் வைத்து பறிமுதல் செய்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட த எக்கொனமிஸ்ட் சஞ்சிகையை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர். இலங்கை அரசின் 18 ஆவது திருத்தச் சட்டத்தை கடுமையாகச் சாடி ஆசிரியர் தலையங்கம் ஒன்றை வரைந்திருந்ததால் அதனை பறிமுதல் செய்துள்ளதாகவும், அதனை தாம் தகவல் திணைக்களத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தம்மால் இறக்குமதி செய்யப்பட்ட சஞ்சிகை சுங்கத்திணைக்கள அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக விஜிதாயாப்பா புத்தக நிலைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

18ஆவது தடவை துரதிஷ்டம் என்ற தலைப்பில் 18 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் த எக்கொனமிஸ்ட் சஞ்சிகை ஆசிரியர் தலையங்கம் வரைந்திருந்தது அரசை கடும் சீற்றத்திற்கு உள்ளாகி உள்ளது.

கடந்த மாதமும், போரின் பின்னரான அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொள்ளப்படும் முறைகேடுகள் தொடர்பில் இந்த சஞ்சிகை கட்டுரை ஒன்றை வரைந்திருந்ததால் அதனை அரசு முதலில் தடை செய்திருந்ததுடன் ஒரு வாரத்தின் பின்னர் அனுமதித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



மல்லாகம் பழம்பதிபிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றது. இதில் பிள்ளையார் தேரில் பவனி வருவதையும் அடியார்கள் அங்கப்பிரதட்சணை செய்வதையும் வருகைதந்த பக்தர்கள் கூட்டத்தின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# உலகக் கோப்பை ஹொக்கித் தொடர் இந்திய பெண்கள் அணி அபார வெற்றி

பெண்கள் உலகக் கோப்பை ஹொக்கித் தொடரில் தென்னாபிரிக்காவை வீழ்த்திய இந்திய அணி 32 ஆண்டுகளுக்குப் பின் 9-வது இடம்பிடித்துச் சாதித்தது.

பெண்கள் உலகக் கோப்பை ஹொக்கி ஆர்ஜன்ரீனாவின் ரொசாரியோ நகரில் நடந்தது. இதில் இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட 12 அணிகள் பங்கேற்றன.

லீக் போட்டியில் ஒரு வெற்றி மட்டும் பெற்ற இந்திய அணி 9, 10-வது இடத்துக்கான போட்டியில் தென்னாபிரிக்காவைச் சந்தித்தது.

போட்டி தொடங்கியது முதல் தென்னாபிரிக்க அணியினர் தாக்குதல் ஆட்டத்தில் இறங்கினர். இதன் பலனாக இந்த அணியின் ஜார்ஜ் மூன்றாவது நிமிடத்தில் பீல்டு கோல் அடித்து முன்னிலை பெற்றுத் தந்தார்.

பதில் தாக்குதலில் இறங்கிய இந்திய அணிக்கு ராணி ராம்பால் கைகொடுத்தார். 9-வது நிமிடத்தில் கிடைத்த பெனாட்டி கோனர் வாய்ப்பில் கோல் அடித்த இவர், அடுத்த நிமிடத்தில் (10-வது) பீல்டு கோல் அடித்து அசத்தினார்.

பின் தென்னாபிரிக்காவின் ரேயான் (27-வது நிமிடம்) ஒரு கோல் அடிக்க முதல் பாதி 2:2 என சமநிலையில் முடிந்தது.

### இந்தியா வெற்றி

இரண்டாவது பாதியின் தொடக்கத்தில் (37-வது நிமிடம்) இந்தியாவின் அஞ்சும், பெனாட்டிக் கோனர் வாய்ப்பை கோலாக மாற்ற இந்தியா 3:2 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்து 56-வது நிமிடத்தில் ஹாண்டா அடித்த கோல் காரணமாக இந்திய அணி 4:2 என அசைக்க முடியாத முன்னிலை பெற்றது.

இதற்குப் பதிலடியாக கோயட்ஜீ (58-வது நிமிடம்) மட்டும் ஒரு கோல் அடித்தார். இறுதியில் இந்திய அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

### சிறந்த இடம்

கடந்த உலகக் கோப்பைத் தொடரில் 11-வது இடம் பெற்றிருந்த இந்திய அணி இம்முறை 9-வது இடத்தைப் பிடித்து அசத்தியது. கடந்த 1978 உலகக் கோப்பைத் தொடரில் 7-வது இடம்பெற்ற பின், 32 ஆண்டுகளுக்குப் பின் இப்போதுதான் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளது. இத் தொடரில் இந்தியா சார்பில் அதிக கோல் அடித்தவர் என்ற பெருமையை 15 வயது நிரம்பிய வீராங்கனை ராணி ராம்பால் தட்டிச் சென்றார். (ச)

# அமெரிக்க ஓபன் டென்னிஸ் பெல்ஜிய வீராங்கனை சம்பியன்

(நியூயோர்க்)

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் கிலிஸ்டர்ஸ் சம்பியன் பட்டத்தை தனதாக்கினார்.

இறுதிப் போட்டிக்காக உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான பெல்ஜியத்தை



சேர்ந்த கிம்கிலிஸ்டர்ஸ் 7 ஆம் நிலை ரஷ்ய வீராங்கனையான வெராஜ்வானரேவா மோதினார்கள்.

நடப்புச் சம்பியனான கிலிஸ்டர்ஸ் 6-2, 6-1 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வென்று சம்பியன்பட்டம்பெற்றார். இந்த வெற்றியைப்பெற அவருக்கு 1 மணி நேரமே தேவைப்பட்டது. 27 வயதான கிலிஸ்டர்ஸ் கைப்பற்றிய 3-வது கிராண்ட்சிலாம் பட்டம் இதுவாகும். (ச)

# மதுபோதையில் பயணிப்போரால் சக பயணிகள் அசௌகரியம்.

(வேலணை)

யாழ்ப்பாணத்திலிருந்து மாலை வேளையில் ஊர்காவற்றுறை மற்றும் குறிகாட்டுவானுக்குச் செல்லும் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பேருந்துச் சேவை மற்றும் தனியார் பேருந்துகளில் மதுபோதையில் பயணம் செய்வோரால் சக பயணிகள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

மதுபோதையில் பயணிப்போர் சக பயணிகளுடன் தகாத வார்த்தையைப் பிரயோகித்துப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றனர்.

இதேவேளை பேருந்து நடத்துநர்கள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி மதுபோதையில் வருவோரை எச்சரிப்பதோ அல்லது அவர்களை அமைதிப்படுத்துவதோ இல்லை எனவும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவர்கள் பேருந்தில் ஏறும்போது மதுபோத்தல்களையும் தம்வசம் வைத்து ஏறுவதைக் காண முடிகின்றது.

எனவே சம்பந்தப்பட்டோர் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து மக்கள் தமது பயணத்தை இடைஞ்சல் ஏதுமின்றி பயணிப்பதற்கு உதவுமாறு கோரிக்கை விடுக்கின்றார்கள். (ஸ்ரீ-2,22)

# கே.பியை செவ்வி காண பி.பி.சிக்கு அனுமதி மறுப்பு

(லண்டன்)

கே.பி என அழைக்கப்படும் தம்பையா செல்வராஜா பத்மநாதனை செவ்வி காண பி.பி.சியின் சிங்கள சேவைக்கான சந்தேசிய விடுத்த கோரிக்கையை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

23 கேள்விக் கொத்துக்களுடன் அந்த செவ்விக்கான கோரிக்கையை சந்தேசிய விடுத்திருந்தார்.

எனினும் இலங்கை அரசாங்கத்திற்கு விரோதமான வானொலிக்கு செவ்வி வழங்க இணங்கப்போவதில்லை என கோத்தபாய தெரிவித்துள்ளதாக பி.பி.சி தெரிவித்தது. (ச)

# உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டி

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட யாழ்.மாவட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையே கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட அரையிறுதி ஆட்டங்கள் இன்று இரவு 7 மணிக்கு மின்னொளியில் ஆரம்பமாகவுள்ளது.

வடமராட்சியில் பல வருடங்களுக்குப் பின் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட அணிகள் ஒன்றுடன் ஒன்று மோதுகின்ற போட்டி என்பதால், பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் மத்தியில் இரவு 7 மணிக்கு முதலாவது போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் வடமராட்சி முன்னணிக் கழகங்களில் ஒன்றான வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் குருநகர் பாடுமீன் அணியும் மோதவுள்ளது.

நான்கு அணிகளும் யாழ்.மாவட்டத்தில் பல வெற்றிக் கேடயங்களை சுவீகரித்த அணிகள் என்பதால் இன்று மின்னொளியில் நடைபெறும் போட்டிகளில் அதிகளவான உதைபந்தாட்ட ரசிகர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-3,24)

# நேத்ரா ரி.வியில் ஸ்ரீ வரலக்ஷ்மி விரத பூசை

கொழும்பு- சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தில் சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஸ்ரீ வரலக்ஷ்மி விரத பூசையின் தொகுப்பு ரூபவாஹினி தமிழ் அலைவரிசையான நேத்ரா ரீவியில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிமுதல் 6.00 மணிவரை ஒளிபரப்பாகும். (ச)

# திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இவ்வருடம் 'முத்தமிழ் சங்கமம்' விழா

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் வருடாவருடம் நடத்தப்பட்டு வருகின்ற தமிழ் விழா இவ் வருடம் முத்தமிழ் சங்கமம் என்ற பெயருடன் தமிழ்ப் பண்பாட்டுப் பெறுமானங்களைப் பேணும் முனைப்புடன் நடத்தப்படவுள்ளதாகவும் இந்த நிகழ்வில் ஒரு பகுதியாக மாணவர்கள் மற்றும் இளையோர்களின் ஆக்கத் திறனுக்குக் களம் கொடுக்கும் போட்டிகளும் நடைபெறவுள்ளதாகத் திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்திரு.நீ.மரிய சேவியர் அடிகள் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முத்தமிழ் சங்கமம் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள், பண்பாட்டுப் பாரியம்பரியங்களில் மக்களுக்குப் பற்றுதலையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துதல், மாணவர்கள், இளையோர் தமது மொழி, பண்பாடு தொடர்பான விடயங்களில் தெளிவினைப் பெற்றுத் தன்மானத்தோடு வாழ்தலை ஊக்குவித்தல், கல்விசார் புறச் செயற்பாடுகளில் ஈடு படுதலை ஊக்கப்படுத்தி மாணவரின் ஆக்கத் திறனை விருத்தி செய்ய களம் அமைத்துக் கொடுக்கும் நோக்குடன் போட்டிகள் இடம் பெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## முத்தமிழ் சங்கமம் தொடர்பான விபரங்கள்

**25.09.2010 சனி**
காலை 09.00 மணி :- பேச்சுப் போட்டி
மாலை 06.00 மணி :- கலை நிகழ்வுகள்

**26.09.2010 ஞாயிறு**
காலை 09.00 மணி :- சிறுகதை பற்றிய கருத்தரங்கு
மாலை 06.00 மணி :- கலை நிகழ்வுகள்

**09.10.2010 சனி**
காலை 09.00 மணி :- பண்ணிசைப் போட்டி
மாலை 06.00 மணி :- கலை நிகழ்வுகள்

**10.10.2010 ஞாயிறு**
காலை 09.00 மணி :- இசை பற்றிய கருத்தரங்கு
மாலை 06.00 மணி :- சங்கீதக் கச்சேரி

**16.10.2010 சனி**
காலை 09.00 மணி :- நாடகப் போட்டி
மாலை 06.00 மணி :- கலை நிகழ்வுகள்

**17.10.2010 ஞாயிறு**
காலை 09.00 மணி :- நாடகப் பயிற்சிப் பட்டறை
மாலை 06.00 மணி :- கலை நிகழ்வுகள்

**22.10.2010 வெள்ளி**
காலை 09.00 மணி :- பண்பாடு பற்றிய கருத்தரங்கு
மாலை 06.00 மணி :- கலை நிகழ்வுகள்

**23.10.2010 சனி**
காலை 09.00 மணி :- பட்டமளிப்பு நிகழ்வுகள்
மாலை 06.00 மணி :- கலை நிகழ்வுகள்

**24.10.2010 ஞாயிறு**
காலை 09.00 மணி :- கருத்தாடல்
மாலை 06.00 மணி :- கலை நிகழ்வுகள்

## முத்தமிழ் சங்கமம் போட்டிகள் மற்றும் கலை நிகழ்வுகள் ஏற்பாட்டின் அடிப்படை நோக்கம்

01. பண்பாட்டுப் பாரம்பரியங்களில் மக்களுக்குப் பற்றுதலையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துதல்.
02. மாணவர்கள், இளையோர்கள் தமது மொழி, பண்பாடு தொடர்பான விடயங்களில் தெளிவினைப் பெற்று தன்மானத்தோடு வாழுதலை ஊக்குவித்தல்.
03. கல்விசார் புறச்செயற்பாடுகளில் ஈடுபடுதலை ஊக்கப்படுத்தி மாணவரின் ஆக்கத் திறனை விருத்தி செய்ய களம் அமைத்துக் கொடுத்தல்.

## போட்டிகள் தொடர்பான விபரங்கள் / நிபந்தனைகள்

| போட்டிகள் | திகதி | தலைப்பு | நேர வரையறை | வய தெல்லை | இடம் |
|---|---|---|---|---|---|
| பேச்சு (தனி) | 25.09.2010 காலை 9 மணி | தேச வழமை | 03 நிமிடம் | 16-25 | கலைத்தூது கலையகம், 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம். |
| பண்ணிசை (தனி) | 09.10.2010 காலை 9 மணி | | 03 நிமிடம் | 16-25 | கலைத்தூது கலையகம், 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம். |
| நாடகம் (குழு) | 16.10.2010 காலை 9 மணி | எமது பண்பாட்டைப் பாதுகாப்போம் | 07 நிமிடம் | 16-25 | கலைத்தூது கலையகம், 286, பிரதான வீதி, யாழ்ப்பாணம். |

❖ சகல போட்டிகளுக்குமான முடிபுத் திகதி 20.09.2010 ஆகும்.

❖ இப் போட்டிகளில் பங்குபற்றி முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறும் வெற்றியாளருக்குப் பணப் பரிசும் சான்றித ழும் வழங்கப்படும்.

❖ பண்ணிசைப் போட்டி, நாடகப் போட்டி என்பவற்றுத் தேவையான இசைக் கருவிகள் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

❖ போட்டிகளில் பங்குபற்றுவோர் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைச் சனசமூக நிலையத் தலைவர்/செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் திருமறைக் கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

❖ போட்டிகளுக்கு வருகை தரும் போது வயதை உறுதிப்படுத்தும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏதாவதொரு ஆவணத்தைக் கொண்டு வருதல் வேண்டும்.

❖ நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

# சென்னைக்குச் சென்றார் ஒபாமாவின் பிரதிநிதி

(சென்னை)

அமெரிக்க அதிபர் ஒபாமாவின் அரசு நிர்வாகத்தைச் சேர்ந்த மெலேன் வெர்வீர் உலக மகளிர் விவகாரத்திற்காக அமைக்கப்பட்ட தனித்துறைக்கு சிறப்புப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபின் முதல் முறையாக அவர் அமெரிக்காவில் இருந்து விமானம் மூலம் நேற்று சென்னை சென்றார்.

சென்னைக்கு சென்ற அவர் செய்தியாளர்களிடம் பேசியபோது உழைக்கும் மகளிர் பொருளாதாரம் எப்படி உள்ளது என்று அறிவதற்காக உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறேன்.

முதலாவதாக நான் தமிழக உழைக்கும் மகளிரை சந்திப்பதற்காக வந்துள்ளேன். அனைத்து நாடுகளுக்கும் சென்ற பின்பு அமெரிக்க அதிபர் ஒபாமாவை சந்தித்துப் பேசுவேன்.

அப்போது உழைக்கும் மகளிர் சுயமாக தொழில் செய்வதற்கு எந்த மாதிரியான உதவிகளைச் செய்யலாம் என்று விவாதித்து முடிவு செய்யப்படும். தமிழக உழைக்கும் மகளிர்களுக்கு தேவையான உதவிகளை நிச்சயம் செய்வோம் என்று தெரிவித்தார். (ச-5)

# கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கு நியமனம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

## பிரதியமைச்சர் முரளிதரன் உறுதி

(கொழும்பு)

கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனங்களை பெற்றுக்கொடுக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என மீள் குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினருடனான சந்திப்பிலேயே அவர் இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின்தலைவர் கே.ஜெயராஜ் தலைமையிலான குழுவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மீள் குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனை மட்டக்களப்பில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதியமைச்சர்,

நீண்டகாலமாக தொடர்ந்துவரும் கிழக்கு மாகாண பட்டதாரிகளின் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதுதொடர்பில் ஏற்கனவே கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளேன். மிக விரைவில் கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றிய பிரதிநிதிகளை கல்வி அமைச்சரை சந்திக்க ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளேன்.

இவர்களின் பிரச்சினைகள் குறித்தும் அவர்களுக்கான தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்துவது தொடர்பிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன். கிழக்கு மாகாண வேலை யற்ற பட்டதாரிகள் ஒன்றிய பிரதிநிதிகள் ஜனாதிபதியை சந்தித்து தமது கோரிக்கை யினை முன்வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

# முஸ்லிமாக பிறந்து கிறிஸ்தவராக மாறிய இலங்கை யுவதிக்கு அமெரிக்க கிறீன் அட்டை

(நியூயோர்க்)

முஸ்லிமாகப் பிறந்து அமெரிக்காவில் கிறிஸ்தவராக மதம் மாறி இருக்கும் இலங்கை யுவதி ரிவ்கா பாரியிற்கு கிறீன் அட்டை கிடைத்துள்ளது. இவர் 5 வயதில் பெற்றோருடன் அமெரிக்காவுக்கு வந்து குடியேறியிருக்கிறார்.

இவர் கிறிஸ்தவராக மாறியபின் 17 ஆவது வயதில் வீட்டைவிட்டு வெளியேறிச் சென்றுவிட்டார். இவர் அமெரிக்காவில் சட்டரீதியாக தொடர்ந்து தங்கியிருக்கிறமைக்கு கிறீன் அட்டை தேவைப்பட்டது.

அதற்காக இவர் 18 வயது ஆகும்வரை காத்திருக்கவேண்டியிருந்தது. கடந்த மாதம் இவருக்கு 18 வயது ஆனது. இந்நிலையில் கிறீன் அட்டைக்கு விண்ணப்பித்தார். இவருக்கு கிறீன் அட்டை கிடைக்கப்பெற்றுள்ளது என்று இவரின் சட்டத்தரணி ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இவ்யுவதி ஒரு புற்று நோயாளி என்பது குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவராக மாறியமைக்காக பெற்றோரால் கௌரவக் கொலை செய்யப்படலாம் என்கிற அச்சம் இவருக்கு உண்டு. (ச)

# பதில் ஆணை...

கொண்டு இங்குள்ள தேர்தல் மாவட்டங்களுக்கு நேரில் சென்று தேர்தல் பெயர் பட்டியலில் காணப்படும் பிழைகள் தொடர்பாக ஆராய உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# தாண்டிக்...

நிலைய பொறுப்பதிகாரி திரட்டியதாக ஜே.வி.பி. ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படிநபர்களால் ஜே.வி.பி அங்கத் தவர்கள் அச்சுறுத்தப் பட்டதாகவும் மேற்படி அலுவலகத்திற்கான கட்டிடத்தின் உரிமையாளர் பொலிஸாருக்கு வாக்குமூலமொன்றை வழங்குமாறு கூறப் பட்டதாகவும் ஜே.வி.பி தெரிவித்துள் ளது. எவ் வாறெனினும் திட்டமிட்டபடி கட்சி அலுவலகம் திறக்கப்படும் எனவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இந்த அலுவலகத் திறப்பு விழாவுக்குச் சென்ற ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவை எதிர்த்து ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றதாகவும் கூறப்பட்டது. (ச-3)

# நல்லிணக்க ஆணைக்குழு...

நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர் தலைப்பிட்டு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார். எனக்கு வசதியான ஒரு திகதியில் வந்து அந்த ஆணைக்குழுவுக்கு முன்னால் சாட்சியமளிக்கும்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் குறித்து சர்வதேச ரீதியில் விசாரணைகள் அல்லது சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிற சூழலில் தமிழ்ச் சமூகத்துக்கு சரித்திர பூர்வமாக, உத்தியோக பூர்வமாக பதிவு செய்யவேண்டியதொரு கடப்பாடு இருக்கிறது என நாங்கள் கருதுகிறோம். அந்தக் கடமையை நாங்கள் நிறைவேற்ற வேண்டும்.

தமிழ் தரப்பில் உள்ள படிப்பினைகளை நாங்கள் அறிந்துகொள்ள வேண்டும். இந்த ஆணைக்குழுவின் மீது எமக்கு பரிபூரண நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ அதற்கு அப்பால்பட்டு எவ்விதமான ஒரு கருமங்களையும் பதிவு செய்ய வேண்டிய ஒரு கடமைப்பாடு இருக்கிறது.

நான் இலங்கைக்கு திரும்பிய பின் சாட்சியமளிக்கலாம் என்று நினைக்கிறேன். எங்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பு ஏற்பட வேண்டும்.

எங்களுடைய கருத்துக்களை அங்கு பதிவு செய்யப்பட்டு இலங்கையில் சகலரும் சர்வதேச ரீதியாக எமது கருத்தை அறிந்து கொள்ளக் கூடிய ஒரு நிலைமை இருக்க வேண்டும். அதுதான் முக்கிய விடயம்.

அந்த அடிப்படையில்தான் நாங்கள் சிந்திக்க வேண்டும்.

இந்தியத் தரப்புடன் பல விடயங்கள் தொடர்பாக தொடர்ந்து தமிழ்தேசியக் கூட்டமைப்பு இணைந்து செயலாற்றி வந்திருக்கிறது.

இந்த கற்றுக்கொண்ட படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கம் ஆணைக்குழு தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியத் தரப் புடன் ஏதாவது விவாதித்ததா? அல்லது கருத்து பரிமாற்றம் செய்துகொண்டதா? என பி.பி.சியின் கேள்விக்கு பதிலளித்த அவர், இது சம்பந்தமாக பதில் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்க வில் லை. தயவு செய்து என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும்.

ஆனால் நாங்கள் எடுக்கிற சகல நடவடிக்கைகளிலும் இந்தியாவுடைய ஒத்துழைப்பை நாங்கள் பெறுவதற்கு நிச்சயம் விரும்புவோம். அதையும் நாங்கள் மனதில் கொண்டுதான் எங்களுடைய முடிபு அமையும் என்றார். (ச-3)

# எதிர்க்கட்சி இல்லாத நிலை...

நாங்கள் பட்ட கஷ்டம், வேதனைகளிலிருந்து மீண்டும் தற்போது ஒரு நல்ல நிலைக்கு வந்துள்ளோம். எம்மிடம் தற்போது அரசியல் அதிகாரம், சகல அதிகாரங்களும் உள்ளன. நாம் மேலும் மேலும் இழப்புகளை எதிர் நோக்கக் கூடாது.

அதனைக் காப்பாற்றக் கூடிய சகல சட்ட திட்டங்களும் எம்மிடம் உள்ளன. அதனைப் பயன்படுத்துவதற்கு ஒரேஒரு வழி கிராமத்து மக்களாகிய நீங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

போராட்டம் மூலம் எவ்வளவு இழப்புக்களை சந்தித்த நாங்கள் எங்களது மக்களை நல்ல நிலைக்கு கொண்டுவரவேண்டும்.

இன்று அரசாங்கம் பலமான நிலையில் உள்ளது. நாம் அரசாங்கத்துடன் இணைந்திருந்தால் தான் எதனையும் சாதிக்கலாம் இன்னும் சிறிது காலம் சென்றால் எதிர்க்கட்சியே இல்லாத நிலைதான் ஏற்படும். அந்தளவுக்கு அரசியல் காய்நகர்தல்கள் இடம் பெற்று வருகின் றன.

எனவே இந்தக் காலத்தைப் பயன்படுத்தி நாம் ஒற்றுமையாக இணைந்து செயற்படுவோமானால் நாம் பலவற்றை இந்த அரசாங்கத்தில் சாதிக்கலாம்.

அதுமட்டுமின்றி இந்த கிராமத்துக்கு அரசியல் பிரச்சினைக்கு அப்பால் ஆரையம்பதி கிராமத்திலேயே பல பிரச்சினைகள் உள்ளன. அதில் எல்லைப் பிரச்சினையும் ஒன்று. இதனை ஆரம்பகாலம் தொட்டே இந்த பிரச்சினையில் நான் கவனமாக இருந்தவன், ஆரையம்பதி பிரதேசத்திலிருந்து நிலங்கள் பறிபோவதை தடுப்பதில் கடும் கவனமாக இருந்தேன்.

தற்போது நாங்கள் இருக்கின்ற போதும் சட்டரீதியான நிலங்களை பறிக்க எங்களால் அனுமதிக்க முடியாது. ஒரு வரையறுக்கப்பட்ட பகுதிக்குள் அத்துமீறி செல்வதை அனுமதிக்க முடியாது. இது தொடர்பில் அமைச்சர் ஹிஸ்புல்லாவுடனும் கதைத்துள்ளேன். அவர்களும் வரமுடியாது. அதேபோல் நீங்களும் செல்லமுடியாது. அது தொடர்பில் கடும்கவனமாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

அரசியல் என்பது சந்தர்ப்பம். நாங்கள் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரசியல் செய்தால் அது கெட்டித்தனம். அதைவிடுத்து நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு வருவதை எதிர்த்துக்கொண்டிருந்தால் எமக்கு ஆகப்போவது எதுவுமில்லை. அதனையே இன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்தில் செய்துகொண்டிருக்கின்றனர்.

நாங்கள் போராட்டத்தைவிட்டு வெளியேறியதே எமது மக்களை சந்தோசமாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காகவே. மீண்டும் எமதுமக்கள் துன்பநிலைக்கு செல்ல விடமாட்டோம் எனவே எங்களுக்குள்ளவாய்ப்பு, வளங்களைப் பயன்படுத்தி மக்களை சந்தோசமான நிலைக்கு கொண்டுவர வேண்டும். இதுதான் எங்களுடைய நோக்கம் என்றார். (ச)

# ஐக்கிய...

மக்களது பிரச்சினைகளை கேட்டறிவர்.

இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு செல்லும் இவர்கள் 16ஆம் திகதி மட்டக்களப்பு அரசாங்க அதிபரையும், பிரதேச இடம்பெயர்ந்து மீள்க குடியமர்ந்த மக்களையும் சந்திக்க உள்ளனர். (ச)

# யாழ்.சிறை...

ஆணையாளர் நேற்று முன்தினம் வழங்கியதை அடுத்து யாழ்.சிறைச்சாலை ஊழியர்கள் இவர்களை நேற்று விடுவித்தனர். (ச)

# சஜித்தை...

தற்போது 43 பேர் மட்டுமே உள்ளனர். இந்நிலையில் மேலும் 25 பேர் விலகினால் 18 பேர் மாத்திரமே ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்திருப்பர் என ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள அதிருப்தி குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர்களும் கட்சியை விட்டு தனித்து இயங்கப்போவதாக எச்சரித் துள்ளார்.

அத்துடன் தமது கோரிக்கையை வலி யுறுத்தி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவின் முன்னிலையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தப்போ வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்சியின் புனரமைப்புக்கள் மேற்கொள்ளப்படாவிட்டால் இந்த தீர்மானத்தை தாம் மேற்கொள்ளப்போவதாக அவர்கள் எச்சரித்துள்ளனர். (ச)




## வேலைக்கு ஆள் தேவை

கல்வி நிறுவனம் ஒன்றில் பெண் ஆலோசகர், பெண் வரவேற்பாளர் தேவை. ஆங்கில அறிவும், கணனி அறிவும் உடையவர்களாக இருத்தல் அவசியம்.



தொடர்புகளுக்கு :
0772229286
0726996969
0789118733

(2457)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.